விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 11 புதன்கிழமை (28.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஐ.நா.தயக்கம்
## கனடா கண்டனம்

(நியூயோர்க்)

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பு காத்திரமான நட வடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக கனடா விசனம் வெளி யிட்டுள்ளது. யுத்தக் குற்றச் செயல்கள் தொடர் பில் நம்பகமான ஆதாரங்கள் காணப்பட்ட போதி லும் ஐக்கியநாடுகள் அமைப்பு இலங்கைக்கு எதிராக நட வடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக கனேடிய வெளி விவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவித் துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஏளனமாக பதிலளித்தார் கோத்தபாய; அமெரிக்காவுக்கு அறிவித்தார் பிளேக்!



### தகவலை கசிய விட்டது விக்கிலீக்ஸ்



(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது பாதுகாப்பு வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்கு தலில் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக பாது காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் அப்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபேர்ட் ஓ பிளேக் கூறியபோது மோசமான காலநிலை காரணமாக இருநாட்களாக ஜெட் போர் விமானங் கள் பறக்கவில்லை என அவர் ஏளன மாக பதிலளித்துள்ளதாக விக்கி லீக்ஸ் தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி அப்போதைய இலங் கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் இது குறித்து அமெரிக்க ராஜாங்கத் திணைக் களத்திற்கு அனுப்பிய இரகசிய தகவல் குறிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ள தாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி பாதுகாப்பு வலயத்தில் பலத்த பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை யின் அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாக இத்தகவல் குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தப் பீரங்கித் தாக் குதல்களில் 124 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் 254 பொது மக்கள் காயமடைந்ததாகவும். ஐக் கிய நாடுகளின் சபையின் பிரதிநிதி தனக்கு தெரியப்படுத்தியுள்ளதாக இத் தகவல் குறிப்பில் றொபோர்ட் ஓ பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி பாதுகாப் புச் (20ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 வீடியோ இன்று கனடாவில்

(கொழும்பு)

சனல் 4 வீடியோ இன்று கனடா வில் உள்ள ஒட்டாவா நகரத்தில் ஒளி பரப்ப நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாக மனித உரிமை கள் கண்காணிப்பகத்தின் கனேடி யக்கிளை அறிவித்துள்ளது. சங்கத் தின் தலைவர் கனேடிய நாடாளு மன்ற உறுப்பினர் பிறற்றின்சோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மனித உரிமை கள் கண்காணிப்பகத்தின் ஆசியா வுக்கான பிரதிப்பணிப்பாளர் எலென் பிஜோசலும் கலந்து கொள்ளவுள் ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கொழும்பிலுள்ள முச்சக்கர வாகன சாரதி களுடன் மாலிகாவத்தை பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை சந்திப்பொன்றை மேற்கொண்டார். இதன்போது முச்சக்கர வாகன சாரதிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன் முச்சக்கர வாகனத் தில் ரணில் பயணம் செய்தார். அவரை படத்தில் காணலாம்.

## இலங்கை சிறைக்கைதிகளுக்கு இந்தியாவில் ஆன்மீக சுற்றுலா வாய்ப்பு?

(கொழும்பு)

சிறையில் சிறந்த முறையில் நடந்து கொள்ளும் கைதிகள் குழு வொன்றை இந்தியாவுக்கு ஆன்மீக சுற்றுலாவுக்கு அனுப்பும் யோசனை யொன்று குறித்து இலங்கை சிறைச் சாலைகள் திணைக்களம் ஆராய் கிறது.

இந்த ஆன்மீக சுற்றுலா புனர் வாழ்வு மற்றும் சீர்திருத்த செயன் முறையின் ஒருபகுதியாக அமையும் என சிறைச்சாலைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

சிறைக்கைதிகள் நலன்புரி சங்க மொன்றினால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனையை அமைச்சர் சந் திரசிறி கஜதீர ஏற்றுக் கொண்டுள்ள தாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாரிய குற்றமிழைக்காத சிறை யில் சிறந்த நடத்தையை வெளிப் படுத்தும் 30-40 ஆண் கைதிகளை இந்த சுற்றுலாவுக்கு அனுப்புவது குறித்து ஆராயப்படுகிறது.

எனினும் இச் சுற்றுலாவுக்கான காலஅளவுதீர்மானிக்கப்படவில்லை. இச் சுற்றுலாவில் இந்தியாவிலுள்ள பௌத்த யாத்திரைத் தலங்களுக்கு செல்ல வசதிகள் செய்யப்படும். இந்து, முஸ்ஸிம், கத்தோலிக்கர்களுக்கும் இதே போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

எனினும் இத்திட்டத்தை அறிமுகப் படுத்து (19ஆம் பக்கம் பார்க்க)

## குமாரகுருபரன்-சம்பந்தன் நேற்றுச் சந்திப்பு

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணி யின் பொதுச்செயலாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான நல்லையா குமரகுருபரன் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனை அவரது உத்தி யோகபூர்வ இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் சம காலத்தில் தமிழர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் மற்றும் எதிர் வரும் கொழும்பு மாநகரசபை மற்றும் தெகிவளை-கல்கிஸை மாநகர சபைகளுக்கான தேர்தல்கள் பற்றி யும் முக்கியமாக கலந்துரையாடினர் என தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## வன்னியில் மக்கள் கொல்லப்பட்டபோது இலங்கை திருச்சபை மௌனம் காத்தது

### அன்றைய நாளில் பாப்பாண்டவருக்கு கடிதம்

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது அரசாங்கத் தால் பாதுகாப்பு வலயம் எனப் பிர கடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் தங்கியிருந்த யாழ்.புனித சம்பத்தரி சியார் கல்லூரியின் முன்னாள் அதி பராக கடமையாற்றிய அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் இப் போருக்குள் பொதுமக்கள் அகப்பட் டுக்கொண்டமை குறித்து இலங்கை யில் உள்ள கத்தோலிக்கத் திருச் சபை எவ்வித கருத்துக்களையும் வெளி யிடாது அமைதிகாப்பதை கண்டித் துள்ளதாக செய்திகள் வெளியாகி யுள்ளன.

இப் போரின்போது இராணுவத் தினரின் நடவடிக்கைகள் தொடர் பில் மேற்குலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபைகளும் தனது அதிருப் தியை வெளியிட்டிருந்த போதிலும் கூட படைத்தரப்பினரின் நடவடிக் கைகளை கண்டித்து இலங்கை திருச்சபையைச் சேர்ந்த கத்தோலிக்க ஆயர்கள் எவ்வித கருத்துக்களை யும் வெளியிட வில்லை என அருட் தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிக ளாரால் பாப்பாண்டவருக்கு அனுப் பியிருந்த கடிதத்தில் கவலை தெரி வித்துள்ளதாக பி.பி.சி. சிங்கள சேவை குறிப்பிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி ஜோசப் பிரான்சிஸ் அடிகளாரால் பாப்பாண்டவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் கடந்த இரவு 3 ஆயிரத்து 318 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 4 ஆயி ரம் வரையிலானவர்கள் காயமடைந் துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச ஒப்பந்தங்களால் தப்பிய இலங்கைப் பிரதிநிதி சவேந்திர சில்வா



(கொழும்பு)

நியூயோர்க்கில் ஐக்கிய நாடு களுக்கான இலங்கையின் பிரதி வதி விடப் பிரதிநிதியாக பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சர்வதேச ஒப்பந்தங்களாலும், இராஜ தந்திர உறவுகளாலும், இராஜ தந்திர சிறப்புரிமைகளாலும் பாதுகாக்கப் பட்டுள்ளார் என வெளிவிவகார அமைச்சு (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் பாராமுகமாக இருந்த அரசு இன்று அபிவிருத்தியை முன்னெடுக்கிறது

### அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தகாலத்தில் வடக்குக்கிழக்கு பிரதேசம் பாராமுகமாக இருந்த போதிலும் அரசு தற்போது அப்பிர தேசங்களில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருவ தாக வீடமைப்பு, நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கல்முனைப் பிரதேசத்தில் சுனாமி யினால் பாதிக்கப்பட்டு தொடர்மாடி வீடுகளில் வசித்துவரும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆரா யும் கூட்டமும் தேர்தல் பிரசாரக் கூட்டமும் சாய்ந்தமருது பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் கல்முனை மாநகர (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வர்த்தகப் பெருமக்களே...**

வியாபாரத்தைப் பதிவு செய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மெண்ட்
கொழும்பு-03
0729994777
0117902938


# கணித, விஞ்ஞான பாட கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் சமூகம் யாழ்.கல்வி வலய ஆதரவுடன் நடத்தும் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கல்விக் கருத்தரங்கு இன்று புதன் கிழமையும், நாளை வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இக்கருத்தரங்கு இன்று புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மற்றும் அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரியில் கணித பாடக் கருத்தரங்கும், அச்சுவேலி மத்திய கல்லூரி மற்றும் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலத்தில் விஞ்ஞான பாடக் கருத்தரங்கும் நடைபெறும்.

நாளை அச்சுவேலி மத்திய கல்லூரி மற்றும் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் கணித பாடக் கருத்தரங்கும், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மற்றும் அச்சுவேலி சென்.திரேசளா மகளிர் கல்லூரியில் விஞ்ஞான பாடக் கருத்தரங்கும் நடைபெறும்.(எ-8)



கடந்த 2009ஆம் ஆண்டு புதுமாத்தளனில் நடைபெற்ற செல் வீச்சில் மரணமடைந்த சிவலிங்கம் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையினை அவரது குடும்பத்தினருக்கு சிறிலங்கா இன்சூரன்ஸ் கிளிநொச்சிக் கிளையின் முகாமையாளர் அ.ரஞ்சித்தினால் வழங்கப்படுவதையும், அருகில் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி இ.சிவசுந்தரம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புகளின் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும், முயற்சியாண்மை கல்வி, மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மதிப்பீட்டு நுட்பங்கள் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய மத்திய நிலையத்தில் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 5.30 வரை நடைபெற வுள்ளது.

இச்செயலமர்வுக்கு குறித்த பாடநெறிகளைக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் தவறாது அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.(ச-8)

# அ.தி.மு.கவிலிருந்து இந்.கம்யூனிஸ்ட் விலகல்

அ.தி.மு.கவுடனான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டணி முறிந்துவிட்டதாகவும், உள்ளாட்சித் தேர்தலில் தமது கட்சி தனித்து போட்டியிடும் என்றும் அக்கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் முதல் பட்டியலையும் அவர் நேற்று வெளியிட்டார்.

எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலுக்காக அ.தி.மு.கவில் கேட்ட தொகுதியும் உரிய மரியாதையும் கிடைக்காத காரணத்தால், தனது அதிருப்தியை வெளிப்படுத்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தே.மு.தி.கவுடன் கூட்டணி அமைத்துள்ளது. (ச-5)

# கிளிநொச்சியில் புதிய நீதிமன்றக் கட்டிடம்

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் மற்றும் வவுனியா சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கான கட்டிடங்கள் நாளை திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வுக்கு பிரதம நீதியரசர் கலாநிதி சிராந்தி பண்டாரநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் கிளிநொச்சி நீதிமன்ற நடவடிக்கை தற்காலிக கட்டிடமொன்றில் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் புதிய கிளிநொச்சி மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி 15 மில்லியன் ரூபாய் செலவிலும் வவுனியா சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற கட்டிடத் தொகுதி 26 மில்லியன் ரூபாய் செலவிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த நீதிமன்ற கட்டிடத் தொகுதியினால் மக்கள் பெரிதும் நன்மை அடைவர் என நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-1)

# இலங்கை அகதிகள் நெதர்லாந்துக்கு

உரோமானியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் சிலர் அடுத்த மாதம் நெதர்லாந்திற்கு மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அகதிகள் அந்தஸ்துக் கோரி அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற இலங்கையர் கள் சிலர் கடந்த வருடம் உரோமானியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் நெதர்லாந்திற்கு மாற்றப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் அங்குள்ள இலங்கை அகதிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக கூறியுள்ளனர். (ச-9)


**தேவை**

அச்சுவேலி மத்திய பகுதியில்
ஒரு மாத காலத்திற்கு பொருட்கள்
சந்தைப்படுத்துவதற்கு விசாலமான
இடம் அல்லது வீடு தேவை.
தொடர்புகளுக்கு
0771807672 (சி-4575)



**வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

DHL WORLDWIDE EXPRESS



- 72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.
- எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.

**அவதானம்**

ஆகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும் பொதிகளுக்கு மேலதிக கட்டணம் நிச்சயம் உண்டு.

கவர்ச்சிகரமான கட்டண குறைப்பு சலுகையை நம்பி எவரும் ஏமாற வேண்டாம்.

சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள், வீசா சேவைகள், கடவுச்சீட்டு புதுப்பித்தல் மற்றும் இணைந்த சேவைகள்.

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

அனுப்பப்படும் பொதிகள், ஆவணங்கள் தொடர்பான சகல விபரங்களையும் உங்கள் கையடக்க தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ள SMS செய்ய வேண்டிய இலக்கம். 00447720334455

**Arrul Global Express**
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.


## உலக விலங்கு விசர்நோய் தினம் 2011

மேற்படி தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ்.நாவலர் றோட் தியாகிகள் அறக்கொடை நிதிய சொர்ணாம்பிகை மண்டபத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக செயலாளர், சுகாதார அமைச்சு, வடமாகாணம், திரு.ச.இரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். இவ்விழாவில் மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டிகளுக்கான பரிசில்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும். பரிசு பெறும் மாணவர்கள் மேற்படி விழாவில் கலந்துகொண்டு பரிசில்களை பெறுமாறு வேண்டுகின்றேன்.

**பரிசு பெறுவோர்:**

**பாடசாலை மட்ட கட்டுரைப் போட்டி**

1-ம் இடம்: சி.தனுராஜ் க.பொ.த.(உயர்தரம்) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
2-ம் இடம்: ச.சத்தியபாலன் க.பொ.த.(உயர்தரம்) யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
3-ம் இடம்: க.துவாரகன் க.பொ.த.(உயர்தரம்) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**ஆறுதல் பரிசுகள்**

1. கி.அரவிந்தன் தரம் - 11 யா/இணுவில் மத்திய கல்லூரி
2. கி.சுவஸ்திகா தரம் -11 யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை
3. டிலானி பூமணி க.பொ.த (உயர்தரம்) யா/இந்து மகளிர் கல்லூரி
4. சி.சிவதர்சினி தரம் - 11 யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை
5. ம.கஜகிருஸ்ணா தரம் - 7 யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**பாடசாலை மட்ட ஓவியப் போட்டி**

1-ம் இடம்: தே.பபிராஜ் தரம் -13 யா/இணுவில் மத்திய கல்லூரி
2-ம் இடம்: சூ.சர்மிளா தரம் -12 யா/இந்து மகளிர் கல்லூரி
3-ம் இடம்: த.மதுசன் தரம் -11 யா/ஹட்லிக் கல்லூரி

**ஆறுதல் பரிசுகள்**

1. வ.தனுசுயன் தரம் - 10 யா/இணுவில் மத்திய கல்லூரி
2. ப.பார்த்தீபன் க.பொ.த.(உயர்தரம்)2011 யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
3. யோ.அரவிந்தன் க.பொ.த.(உயர்தரம்)2011 யா/இணுவில் மத்திய கல்லூரி
4. கு.கஜலக்சன் தரம் -08 யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
5. மு.கலாரஞ்சினி தரம் -13 யா/இணுவில் மத்திய கல்லூரி

விழாவில் நாடகம்,நடனம் போன்றன இடம்பெறும். மக்களைப் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். நன்றி

வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள் பணிமனை,
யாழ்ப்பாணம்.
(சி-4572)

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா தர்மலிங்கம்



எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக நூல் நிலையத்தை அமைக்க நிதியுதவி வழங்கியும், பாடசாலைக்கான காணியை பெருமளவு நிதியில் கொள்வனவு செய்து தந்துதவியவருமான கோணேஸ் அவர்களின் அன்புத் தந்தை கந்தையா தர்மலிங்கம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது பாடசாலையில் கோயில் கொண்டிருக்கும் பாலசுப்பிரமணியரை பிரார்த்திக்கிறோம்.

பாடசாலைச் சமூகம்
யா/சைவத் தமிழ் வித்தியாலயம்,
உரும்பிராய்.
[சி-4573]


**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள HONDA 2000W இஞ்சின் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
077 6108420
(சி-4567)



**வீடு/காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் இருந்து 50 யார் தொலைவில் 2 1/2 பரப்புடைய கடையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு (கடை 15X25 அடி)
T.P.:- 0712303304/ 0777767663. 110 Lks.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
(6433)



**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் வடக்குப் பக்கமாக பலாலி வீதியில் ஆனைவிழுந்தான் குறிச்சியில் இரண்டு பரப்பும் ஆறு தசம் எட்டுக் குழியும் (நில.பர.2, குழி6.8) விற்பனைக்குண்டு.
தொடர்பு:- க.வைரமுத்து
காணிக்காரரின் தத்துவகாரி
0779936083, 0779672274
(6434)

# இன்று ஒரு தகவல்

## அன்புக்கு எல்லை இல்லை

ஓர் ஊரிலே பெரியவர் ஒருவர் இருந்தார். அந்த ஊருக்கு வெளியில் ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டில் ஓர் ஆச்சிரமம் ஒன்றை கட்டி அதிலே அவர் வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் நடு இரவில் அவ்வாச்சிரமத்தில் அவர் தூங்கிக் கொண்டிருந்தபோது, யாரோ கதவைத் தட்டும் சத்தம் அவர் காதில் ஒலித்தது.

உடனே அவர் எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தார். ஓர் இளைஞன் அவர் முன்னால் நின்று கொண்டிருந்தான். அவனது முகத்தைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது.

"தம்பி... யார் நீ?... என்ன வேண்டும் உனக்கு... எப்படி இந்த நேரத்தில் இங்கே வந்தாய்?" என்று கேட்டார்.

"சுவாமி... நான் ஒரு வழிப்போக்கன்... இந்த வழியாக வந்துகொண்டிருந்த வேளையில் இருட்டிப்போய் விட்டது. நான் ஊருக்குப் புதியவன். அதுதான் எங்கே போகிறது என்று தெரியாமல் இங்கே நுழைந்தேன். இன்றிரவு மட்டும் தங்குவதற்கு இடம் தந்தால் பேருபகாரமாக இருக்கும். இந்த இரவு வேளையில் ஆசிரமம்தான் என் கண்ணுக்குத் தென்பட்டது. அதனால்தான் கதவைத் தட்டினேன். உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான்.

அவர் இவன் முகத்தைப் பார்த்தார். பாவமாக இருந்தது. "தம்பி! நீ வேறு எங்கேயும் போகவேண்டாம். இங்கே இன்றிரவைக் கழித்துக் கொள்ளலாம்" என்றார்.

அதன்பின் உள்ளே அழைத்தார். "அது சரி... உன்முகம் மிகவும் வாடிப்போய் இருக்கிறதே... நீ இன்னும் எதுவும் சாப்பிடவில்லையா?" என்றார்.

"ஆமாம்!" என்று அவன் தலையசைத்தான். உடனே அந்த நேரத்தில் அவரால் முடிந்தளவு ஏதோ உணவு தயாரித்து அவனது பசியை நீக்கினார்.

அதன் பின்னர் அவனுக்கு படுக்கை வசதி செய்து கொடுத்தார். அவன் நிம்மதியாகத் தூங்கினான்.

காலையில் எழுந்தவுடன் மறுபடியும் அவனுக்கு உணவு தயாரித்துக் கொடுத்தார். அவன் அதை சாப்பிட்டுவிட்டு புறப்பட் டான்.

அவ்வேளையில் அவர் கேட்டார், "தம்பி நீ எந்த ஊர்? எதற்காக இந்தப் பக்கம் வந்தாய்? என்ன தொழில் செய்கிறாய்?" என்று அடிமேல் அடி கேள்வி எழுப்பினார்.

"சுவாமி,... நீங்கள் மிகவும் நல்லவர். உங்களிடம் பொய் கூறுவது பிழை" என்றான்.

"சரி... சொல்லு!" என்றார் அந்தப் பெரியவர்.

"நான் ஒரு திருடன்... நேற்று இரவு, அயல் கிராமத்திலுள்ள வீடொன்றினுள் நுழைந்து திருடிவிட்டு இந்த வழியாக வந்தேன். வரும் வழியில் சில காவலர்கள் என்னைத் துரத்தினார்கள். அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே இந்த ஆச்சிரமத்தினுள் நுழைந்தேன். ஐயா! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்..." இப்படிச் சொல்லிவிட்டு அவன் சென்று விட்டான். இதைக் கேட்ட பெரியவர் திகைத்துப் போனார்.

"எவ்வளவு பெரிய பாவம் செய்திருக்கிறோம்... இந்த ஆச்சரிரமம் எவ்வளவு புனிதமான இடம். இதில் ஒரு திருடன் தங்கிவிட்டுப் போயிருக்கிறான். அதற்கு நான் காரணமாகி இருக்கிறேன். இந்தப் பாவத்தை எங்கே போய் கழுவ முடியும்!" என்றார். இப்படி எண்ணி எண்ணி அவர் மிகவும் கவலைப்பட ஆரம்பித்து விட்டார்.

உடனே இறைவன் சந்நிதி முன் சென்றார்.

"கடவுளே! ஒரு திருடனுக்குப் போய் அடைக்கலம் கொடுத்து விட்டேன். அது மட்டுமல்ல... உணவளித்துள்ளேன். இப்படிப் பட்ட ஒரு இழிநிலைக்கு என்னை ஆளாக்கி விட்டாயே... இந்தப் பாவத்தை நான் எந்தப் புனித நதியில் போய் கழுவுவேன்" என்று மனம் வருந்தினான்.

இறைவனிடமிருந்து உடனே அவருக்குப் பதில் கிடைத்தது.

"இதோ பார்! அந்தத் திருடனை ஒருநாள் உன்னோடு ஆச்சிரமத்தில் தங்கவைத்து இரண்டுவேளை உணவளித்ததற்கு இப்படிப் புலம்புகிறாய். அவனுக்கு முப்பது வயதாகிறது. முப்பது வருடங்களாக அவனை நான் இந்தப் பூமியிலே வாழ வைத்து மூன்று வேளையும் உணவும் கொடுத்துப் பராமரித்து காப்பாற்றி வந்திருக்கிறேன். இந்தப் பாவத்தை எங்கே போய் கழுவுவது?" என்றார்.

இறைவனின் இந்த வார்த்தைகள் அவரது காதினுள் விழுந்ததும் அவருக்கு விழிப்புணர்வு கிடைத்தது!

அன்புக்கும் கருணைக்கும் எல்லையே இல்லை என்பதை அவர் புரிந்து விட்டார்.

எல்லா எல்லைகளையும் கடந்துபோய் உதவி செய்கிறது என்ற பண்பு என்பதற்குப் பெயர்தான் அன்பு ஆகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பிரதேச செயலக எல்லைகளை மீள் எல்லைப்படுத்தும் திட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேச எல்லைகளை மீள் எல்லைப்படுத்தல் தொடர்பான கூட்டம் நேற்று மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேற்குறித்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 15 கிராம சேவையாளர் பிரிவுகளை 10 கிராம சேவையாளர் பிரிவுகளாக்குவதற்கு கலந்துரையாடல் இடம் பெற்றபோது மக்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். 10 கிராம சேவையாளர் பிரிவுகளாக்குவது தமக்கு உடன்பாடில்லை. தாம் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே, இதற்கான தீர்மானம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலாளர்கள், அபிவிருத்தி தொடர்பான உத்தியோகத்தர்கள் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள மீள் எல்லைச் செயலணி குழுவினரால் முன் னெடுக்கப்படவுள்ளது.

அதேபோன்று இம் மீள் எல்லைப்படுத்தல் தொடர்பான கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்தில்துணுக்காய்பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 20 கிராம சேவையாளர் பிரிவுகளை 14 கிராம சேவையாளர் பிரிவுகளாக்குவதற்கான தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகதெரியவருகின்றது. (4-3)

# க.பொ.த.(சா/த)மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் கருத்தரங்கு

(பூநகரி)

இலங்கை பரீட்சைத்திணைக்களத்தால் தயாரித்து சகல வலயங்களுக்கும் அனுப்பப்பட்ட க.பொ.த.சாதாரண தர மாதிரி பரீட்சை வினாத்தாள்களுக்கு அமைவாக சகல கல்வி வலயங்களிலும் தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான முழுநாள் கருத்தரங்கு பாடத்துறை சார்ந்த வளவாளர்களினால் சகல மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கில் கிளிநொச்சி வலயத்திலுள்ள 10 இற்கும் மேற்பட்ட நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி தமிழ் பாடமும் 8 ஆம் திகதி விஞ்ஞான பாடமும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆங்கில பாடமும் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்குகள் கிளிநொச்சி மகாவித்தியாலயம், அக்கராயன் மகாவித்தியாலயம், கிளி/விவேகானந்தா வித்தியாலயம், கிளி/புனித பாத்திமா வித்தியாலயம், இராமநாதபுரம் மகாவித்தியாலயம், பூநகரி மகாவித்தியாலயம், ஜெயபுரம் முரசு மோட்டை விவேகானந்தா மகாவித்தியாலயம், பிரமந்தனாறு மகாவித்தியாலயம், பளை மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

எனவே, பாடசாலை மாணவர்கள் தமக்கு அருகேயுள்ள இந்நிலையங்களில் கருத்தரங்கில் பங்கு கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கிற்கு அந்தந்த பாடசாலை அதிபர்களை கருத்தரங்கு இணைப்பாளராக கடமையாற்றுமாறு கிளிநொச்சி வலய கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-12-84)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 90 | 80 |
| தக்காளி | 50 | 70 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 40 | 60 | 30 |
| கரட் | 50 | 80 | 70 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 20 | 30 |
| வாழைக்காய் | 40 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 60 |
| பாகற்காய் | 100 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | -- |
| பயற்றங்காய் | 80 | 90 | 60 |
| லீக்ஸ் | 50 | 60 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 50 | 40 |
| முருங்கைக்காய் | 40 | 90 | 60 |
| போஞ்சி | 80 | 180 | -- |
| கத்தரிதம்புள்ள | 30 | 15 | 20 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 220 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

*28.09.2011*
*(புரட்டாதி 11, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*பிரதமை பிற்பகல் 3.12 மணிவரை*
*அர்த்தம் பிற்பகல் 4.39 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*
*நவராத்திரி விரதாரம்பம்.*

**மேடம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், தொழிலில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல் நலம் சீராகும்.

**இடபம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பூமி வாங்கிச் சேர்க்கும் எண்ணம் உருவாகும், விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள்.

**மிதுனம்** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள், பெற்றோர் வழியில் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரும், வாகன பழுதுச் செலவுகள் குறையும், விருந்தினர் வருகையுண்டு.

**கடகம்** பெரியோர்களின் ஆசி கிடைக்கும், இல்லத்தில் இனிமை தரும் சம்பவங்கள் நடைபெறும், சகோதர ஒற்றுமை பலப்படும், தொழில் வளம் பெருக தொல்லை தந்தவர்களே உதவுவர்.

**சிங்கம்** சிறப்பான நாள், பொருளாதார வளர்ச்சி கூடும், சுப செய்தியொன்று சுற்றத்தார் மூலம் வந்து சேரும், புதிய முயற்சிகள் கை கூடும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி** மாலையில் திடீர் பயணங்கள் ஏற்படலாம், உடல் நலம் சீராகும், பெரியவர்களின் தொடர்பால் விரும்பிய காரியம் விரும்பியபடியே நிறைவேறும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**துலாம்** சுப விரயம் ஏற்படும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களை செய்யும் எண்ணம் உருவாகும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்புண்டு, குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**விருச்சிகம்** உறவினர் பகை அகலும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும், விழாக்களில் கலந்துகொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**தனுசு** செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்பால் மதிப்பும் மரியாதையும் உயரும், தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** தொழிலை விரிவுபடுத்த எதிர்பார்த்த கடன் உதவி கிடைக்கும், தேக நலனில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களில் ஏற்பட்ட தகராறுகள் விலகும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள்.

**கும்பம்** ஆலய வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், நண்பர்கள் மனங்கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, பிரயாணத்தில் விழிப்புணர்வு தேவை.

**மீனம்** வரவு திருப்தி தரும் நாள், செல்வாக்கால் உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், ஆலய வழிபாடு ஆனந்தம் வழங்கும், குடும்பத்தினிடையே விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, போசன சுகமுண்டு.

வளவன்

# சமய அறிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தாவடி மேற்கு அருள்தரும் அன்னை ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் கோவில் கேதாரகௌரி நோன்பை முன்னிட்டு சமய அறிவு விருத்திப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி யா/தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்கள் பங்கேற்கலாம். இப் பரீட்சைகள் பாடசாலை சமய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் அடிப்படைச் பொதுச் சமய அறிவையும் உள்ளடக்கியதாகவும் அமையும்.

வினாத்தாள்கள் இரு பகுதிகளைக் கொண்டது. பகுதி-1 முப்பது வினாக்களைக் கொண்டது. ஒரு சொல்லில் ஒரு வாக்கியத்தில் விடை அமையப் பெற வேண்டும். பகுதி-2 குறுக் கெழுத்துப் போட்டியாகும். இது 20 வினாக் களைக் கொண்டது.

இதில் தரம் 10 மாணவர்களுக்கு காலை 8.30 மணிதொடக்கம் 10 மணிவரையும் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 9 மணி தொடக்கம் 10.30 மணிவரையும் தரம் 7 மாணவர்களுக்கு முற்பகல் 11 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரையும் தரம் 8 மாணவர்களுக்கு பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் தரம் 9 மாணவர்களுக்கு பிற்பகல் 4 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பரீட்சை அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை ஆலயத்தில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி பாடசாலை அதிபரினால் உறுதி செய்யப்பட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி ஆலயத்திலேயே சமர்ப்பிக்கவேண்டும்.

முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும் 5 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

அத்துடன் பரீட்சையின் போதும் பரிசில் பெறும் போதும் பரீட்சார்த்தி விண்ணப்பத்திலுள்ள மாணவர் பிரதியைக் காண்பிக்க வேண்டுமென ஸ்ரீவடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா நா.சசிதரசர்மா அறிவித்துள்ளார். (4-2-3)

## யாழ்.மாநகர சபைக்குள்

# மதுபோதையுடன் உள்நுழைய எவருக்கும் அனுமதியில்லை

## யாழ்.மாநகரசபை மேயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதன் எதிரொலியாக சபை வளாகத்திற்குள் மதுபோதையில் எவரும் நுழைய முடியாதென யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபையின் வளாகத்திற்குள் மது போதையில் எவரும் வருவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மாநகர சபையில் பணிபுரியும் ஊழியர்களாக இருந்தாலும் சரி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நேற்று முன்தினம் சபை வளாகத்திற்குள் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கும் மதுபோதையால் ஏற்பட்ட முறுகல் நிலையே காரணம்.

ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் மது போதையில் பெண்ணொருவரை இழுத்து வீழ்த்தியுள்ளார் எனவும் பொறியியலாளர் ஒருவரை தாக்க முற்பட்டுள்ளார் எனவும் கூறியே அவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இவ்வாறு சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் மதுபோதையில் தகாத முறையில் நடந்து கொண்டது எனக்கு மிகவும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது தவிர்த்துக் கொள்வதற்கே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

# அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்ற மூன்று நபர்கள் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

அரசினால் அனுமதிக்கப்பட்ட சாராயத்தை அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் வைத்து விற்பனை செய்த மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக யாழ்.மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

அல்லைப்பிட்டி 2 ஆவது வட்டாரத்தில் தமது வீடுகளில் வைத்து சாராயத்தை விற்பனை செய்து வந்த மூவரை நேற்று முன்தினம் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் குழு மதுபானப் போத்தல்களுடன் கைது செய்தது.

இவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-6)




# சர்வமத பிரதிநிதிகள் யாழ்.குடாவின் இன்றைய நிலை குறித்து ஆராய்வு

(கொழும்புத்துறை)

தேசிய சமாதானப் பேரவையின் யாழ். மாவட்ட சர்வமத பேரவையின் செயற்பாடுகளை ஆராயும் கூட்டம் நேற்றைய தினம் ஆரியகுளம் நாகவிகாரை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிகழ்வுகள் கலாசார, சமய, சமூக நிலவரங்கள், குறிப்பாக தற்போதைய மர்ம மனிதன் உட்பட பாதுகாப்பு நிலவரங்கள், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதியிடம் எடுத்துக் கூறப்பட்டது.

இதன் போது அயர்லாந்தில் இருந்து வருகை தந்த ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி மேரி ஒசான் எதிர்காலத்தில் மக்களிடையே சர்வமத பேரவையினால் ஆற்றப்படவேண்டிய பணிகள் குறித்து தமது ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக சர்வமத பேரவையினரிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், மௌலவிகள், இந்துக் குருமார்கள் உட்பட சமூக தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (4-12-51)

# குறும்படம், ஆவணப்படம், பாடல் வெளியீட்டுவிழா

டெல்ப்ட் மூவிஸ் வழங்கும் நெடுந்தீவு முகிலனின் குறும்படம், ஆவணப்படம், பாடல் ஆகியவற்றின் வெளியீடும் பயணிகள் கவனத்திற்கு எனும் கவிதை நூல் அறிமுக விழாவும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.ஞானம்ஸ் ஹோட்டல் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் ச.ஜெயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினர்களாக தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளரும் ஏஏஏ மூவிஸ் தலைவருமான க.செவ்வேள் , சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்லைக்கழக தமிழ்த்துறை வாழ்நாள் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், ஜப்பான் டோக்கியோ கச்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் வரவேற்புரையினை யாழ்.பல்கலைக் கழக ஊடகக்கற்கை நிலைய சுகிர்தினி வேலாயுதமும் தண்ணீர் குறும்படத்தின் கருத்துரையை சூரியன் எவ்.எம். சிரேஷ்ட அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தனும் ஆற்றவுள்ளனர். பயணிகள் கவனத்திற்கு 11 எனும் கவிதை நூலின் ஆய்வுரையை யாழ். இலக்கிய குவியம் தலைவர் வேலணையூர் தாஸ், காய்ந்து போன தேசத்தில் எனும் பாடலின் நயப்புரையை அகில இலங்கை கலை இலக்கிய சங்க தலைவர் பாடல் ஆசிரியர் பொன் சுகந்தன், வேரோடி ஆவணப் பட அறிமுகவுரையை ஜீவநதி சஞ்சிகையின் துணை ஆசிரியர் கவிஞர் துஷ்யந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதில் தண்ணீர் குறும்பட முதற்பிரதியை ராஜா துரையரங்கு உரிமையாளர் எஸ்.தியாகராசா, பயணிகள் கவனத்திற்கு எனும் கவிதை நூலின் முதற்பிரதியை யாழ்ப்பாணம் கஜமுகன் ஹாட்வெயர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், வேரோடி ஆவணப்பட முதற்பிரதியை அகரம் பணிப்பாளர் தி.ஜனகன், காய்ந்து போன தேசத்தில் எனும் பாடலின் முதற்பிரதியை கீல்ஸ் உணவு தயாரிப்பு நிறுவன எஸ்.யேசுதாசன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (2-12)

# துரிதகணித போட்டி

(சாவகச்சேரி)

வடமாகாணதுரித கணித போட்டிக்கான தென்மராட்சி பாடசாலைகளுக்கிடையேயான தெரிவுப் பரீட்சை நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சையில் தரம் 2,3,4,5 ஆகியவற்றில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சி பிரதேச பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவேண்டும்.

• அத்துடன் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான மாகாண மட்டப் போட்டிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறுமென்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (4-12-29)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கலைவட்டம் மற்றும் நுண்கலைத் துறையின் ஆதரவில் பாணினி விஜயசிறீவர்த்தனவினால் டாஸ்சிவாதமும் அழகியலும் எனும் தொனிப்பொருளில் கருத்துரை நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய கலைப்பீட கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

எனவே கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி ஏ.என். கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார். (4-12)





சுன்னாகத்திலுள்ள வாழ்வகம் நிறுவனத்தின் நிறுவுனர் நினைவு நாளும் நினைவுப் பேருரையும்–2011 அண்மையில் நடைபெற்றது. இதில் வாழ்வகத் தலைவர் அ.ரவீந்திரன் வாழ்வகக் கொடியினை ஏற்றுவதையும் அருகில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட ராஜா கெம்பிளைக்ஸ் உரிமையாளர் ஆ.இராஜசிங்கம், பிரதேச மின் பொறியியலாளர் ச.ஞானகணேசன் மற்றும் வாழ்வக மாணவர்கள் நிற்பதையும் சிவபூமி மாணவன் சி.துஷ்யந்தனுக்கு ஒலிம்பிக் சாதனைக்கான பொற்கிழியை வாழ்வகத்தலைவர் வழங்கி கௌரவிப்பதனையும் அருகில் சிவபூமி பாடசாலை அதிபர் திருமதி குகதாசன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:–சுன்னாகச் செய்தியாளர்)

# நவராத்திரிதின சிறப்பு நிகழ்வுகள்...

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாவலர் மணி மண்டபத்தில் தினந்தோறும் பிற்பகல் 3.30 மணி முதல் 5.30 மணிவரை நவராத்திரி விழா நடைபெற்று வருகின்றது. இதில் நாளை வியாழக்கிழமை *நவராத்திரி நாயகிகள்* என்னும் தொனிப் பொரு ளில் சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். இதில் சித்தன்கேணி சிவசக்தி அறநெறிப்பாடசாலை மற்றும் கோப்பாய் சித்திர வேலாயுதர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

அத்தோடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை *நவராத்திரி விரதமும் ஆத்மீகமும்* எனும் தொனிப்பொருளில் எஸ்.கே.என். தவராஜா சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். இதில் புத்தூர் கன்னியர் வைரவ அறநெறிப் பாடசாலை மற்றும் மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (4-12)

* * *

(புன்னாலைக்கட்டுவன்)

ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி பூசைகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெறவுள்ளது. இதில் பத்தாவது நாள் விஜயதசமி பூசையும் கன்னிவாழை வெட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (4-12-78)

# சிறுவர்களுக்கான நீதிமன்றங்களை அமைக்க ஜனாதிபதி ஆலோசனை

## நீதியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சிறுவர் நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாக நீதி அமைச்சின் செயலாளர் சுஹறத் கம்லத் தெரிவிக்கின்றார்.

நீதி அமைச்சில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சுடன் நடைபெற்ற வரவு-செலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலின் போது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சிறுவர்களுக்கான நீதிமன்றங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் முறையான திட்டங்களை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி திறைசேரி செயலாளருக்கு விசேட உத்தரவொன்றை பிறப்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சிறுவர்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் சிறுவர் நீதிமன்றம் நிர்மாணிக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் சுஹறத் கம்லத் கூறினார். (4-2)

# யாழ்.மாவட்டத்தில் 155 பேர் இதுவரை டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளாகினர்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்தில் 155 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்று வரை 259 பேர் டெங்கு நோய்த்தாக்கதிற்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் டெங்கு நோயின் தாக்கத்திற்குள்ளாகி உயிரிழந்ததோடு 155 பேர் தாக்கத்துக்குள்ளானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள பதினொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுடன் ஒப்பிடும் போது யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியிலேயே டெங்கு நோயால் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 65 பேர் இந்தப் பிரிவில் டெங்கு நோய் தாக்கதிற்குள்ளாகியுள்ளனர்.

அத்தோடு இந்த வருடத்தில் ஜனவரி மாதத்தில் 60 பேர் டெங்கு நோயின் தாக்கதிற்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு 53 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்குள்ளாகி இருந்தது உறுதிப்படுத்தப்பட்டது.

அத்தோடு ஜனவரி மாதத்தில் ஒருவர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளார்.

இது தவிர இம் மாதத்தில் மட்டும் 31 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளாகி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

31 பேர் அனுமதிக்கப்பட்ட போதிலும் டெங்கு நோய் தாக்கத்திற்குள்ளாயிருந்தது 7 பேர் மட்டுமே என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு இந்த மாதத்தில் டெங்கு நோய் தாக்கதிற்குள்ளாகி நேற்றுவரை எவரும் உயிரிழக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-6)

# உள்ளூர் சுற்றுலாத்துறை முன்னேற்றம் கண்டுள்ளது

உள்ளூர் சுற்றுலாத் தொழில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்றம் அடைந்துள்ளதென்று பிரதி அமைச்சர் லக்ஷன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். உலக சுகாதார தினத்தை முன்னிட்டு நவிம்மாவித்தையில் நடைபெற்ற கலைக்கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வருடாவருடம் 6 இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை கவர்வது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இருந்த போதிலும் இந்த இலக்கு மீறப்பட்டுள்ளது. மொத்தம் 8 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தந்துள்ளார்கள். இவர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ஒரு பில்லியன் ரூபா எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

காலாவதியான சொக்கிலேட் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சி வர்த்தகர் ஒருவர் விலைக்கட்டுப்பாட்டுச் சபையால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத சூதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * *

குறிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக குளிர்பானம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் விலைக்கட்டுப்பாட்டுச் சபையால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * *

குறிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக பனடோல் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் விலைக்கட்டுப்பாட்டுச்சபையால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 5 ஆயிர்ம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)


## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### (அ). செய்முறைப் பரீட்சை (சங்கீதம் / நடனம்)

1. இசைமாணி / நடனமாணி 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் வருடத்தேர்வு-2009
2. கலைமுதற் தேர்வு -2009
3. பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி -I - 2008 & 2009
4. பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி -II -2008

### (அ) செய்முறைப் பரீட்சை (நாடகமும் அரங்கக் கலைகளும் EX.DTAG.3.2)

1. பொதுக் கலைமாணித் தேர்வு -2008

மேற்படி கற்கை நெறிகளில், நடன பாடத்திற்கான செய்முறைப் பரீட்சைகளை 12.10.2011 (புதன்கிழமை) தொடக்கமும், சங்கீதப் பாடத்திற்கான செய்முறைப் பரீட்சைகளை 13.10.2011 (வியாழக்கிழமை) தொடக்கமும் இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் நாடகமும் அரங்கக் கலைகளும் பாடத்திற்கான (EX.DTAG3.2) செய்முறைப் பரீட்சையை 08.10.2011 (சனிக்கிழமை) மற்றும் 09.10.2011 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தினங்களில் கலைத்துறை மண்டபம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் ஏற்கனவே வழங்கப்பட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன், செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
27.09.2011

(சி-4571)





மங்களகரமான தெரிவுகள்

திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

போஸ்கோ

610/3, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 0370

(சி/4569)

# இரத்மலானை விமான நிலையத்திற்கு வெளிநாட்டு ஜெட் விமானங்கள்

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையமானது, நகர விமான நிலையமாக மாற்றப்பட்டு வெளிநாட்டு தனியார் ஜெட் விமானங்களுக்கும் சிறிய வான்கலங்களுக்கும் சேவை வழங்கப்படும் என விமான நிலைய மற்றும் விமான சேவைகள் அதிகார சபைத் தலைவர் பிரசன்ன விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றத்தின் மூலம் நாட்டிற்கு மேலதிக வருமானமும் அந்நிய செலாவணியும் கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு வரும் தனியார் ஜெட் விமானங்களின் எண்ணிக்கை 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. எனவே, இரத்மலானை விமான நிலையத்தை நகர விமான நிலையமாக மாற்றுவதற்கான ஆரம்ப வேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இரத்மலானை விமான நிலையம் இலங்கையின் முதலாவது சர்வதேச விமான நிலையமாகும். கடந்த 1960 ஆம் ஆண்டு வரை சர்வதேச விமான நிலையமாக இயங்கியது. யுத்த காலத்தில் அவ் விமானநிலையம் விமானப் படைத்தளமாக பயன்படுத்தப்பட்டது. (4-2)

# பாதசாரிக்கடவை விதியை மீறியவருக்கு அபராதம் விதிப்பு

(கொழும்பு)

பாதசாரிகளுக்கான மஞ்சள் கடவையை பயன்படுத்தாமல் வீதியை கடந்ததாக குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒருவருக்கு கொழும்பு போக்குவரத்து நீதிமன்ற நீதிவான் நேற்று அபராதம் விதித்துள்ளார்.

மொஹமட் அன்சார் மொஹமட் முஸ்தபா எனும் இந்நபர் போக்குவரத்து நீதிமன்ற நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

பாதசாரிகளுக்கான கடவை விதியை மீறும் நபர்களுக்கு அறிவூட்டுவதற்காக தாம் வகுப்பொன்றை நடத்துவதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். இந்நபரை கடந்த ஞாயிறன்று வகுப்புக்கு வருமாறு உத்தரவிடப்பட்டிருந்தபோதிலும் அவர் சமுகமளிக்கவில்லை என பொலிஸார் கூறினர்.

பாதசாரிகளுக்கான மஞ்சள் கடவையிலிருந்து 50 மீற்றர் தூரத்திற்குட்பட்ட பகுதியில் மஞ்சள் கடவையை பயன்படுத்தாமல் வீதியை கடப்பது குற்றமாகும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந் நிலையில் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு குறைந்தளவு பணத்தை அபராதமாக விதித்த நீதிவான் வீதி ஒழுங்குகளை பின்பற்றுமாறும் எச்சரித்தார். (4-2)

# நாட்டில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள்

## புகையிரத திணைக்களம் தகவல்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் 716 பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் இருப்பதாக புகையிரதத் திணைக்களத்தின் தகவல் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தகவல் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, புகையிரதப் பயணத்தினதும் புகையிரதப் பாதையினதும் விபத்துக்களிலிருந்து பயணிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக புகையிரதக் கடவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் நாடு பூராகவுமுள்ள கடவைகளில் 303 புகையிரதக் கடவைகளே பாதுகாப்பானதாகும். 716 புகையிரதக் கடவைகள் பாதுகாப்பற்ற நிலையிலும் காணப்படுகின்றது.

கடந்த 2008 ஆம் ஆண்டில் 43 புகையிரத விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இவ் விபத்துக்களில் 16 பேர் உயிரிழந்தும் 27 பேர் காயமடைந்துமுள்ளனர். 2009 ஆம் ஆண்டில் புகையிரத விபத்துக்களால் 20 பேர் உயிர் துறந்தும் 46 பேர் காயத்துக்குமுள்ளாகினர். கடந்த 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற புகையிரத விபத்துக்களால் 12 பேர் இறந்தும் 65 பேர் காயத்துக்குமுள்ளாகி உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இதேவேளை, புகையிரத விபத்துக்களைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# தமிழினிக்கு புனர்வாழ்வு அளிப்பது குறித்து ஆராயப்படுகின்றது

## நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல் துறைப்பொறுப்பாளர் சுப்பிரமணியம் சிவகாமி எனப்படும் தமிழினிக்கு புனர்வாழ்வு அளிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழினிக்கு புனர்வாழ்வு அளித்து மீளவும் சமூகத்துடன் இணைப்பது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றம் தமிழினியின் சட்டத்தரணிக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

கொழும்பு நீதிமன்றின் பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழினி குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் அவர் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழினியின் இளமைக்காலத்தை புலிகள் பறித்துக் கொண்டதாகவும் தற்போது அவர் சிறையில் வாடுவதாகவும் சட்டத்தரணி நீதிமன்றில் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே 27 ஆம் திகதி இடம்பெயர் முகாம் ஒன்றில் வைத்து தமிழினியை பொலிஸார் கைது செய்தனர்.

இவர் 1991 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார். இதேவேளை, தமிழினி தொடர்பான விசாரணை அறிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (4-2)

# யுத்த காலத்தில் உரிய முறையில் பதிவுத்திருமணம் நடைபெறவில்லை

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பலர் உரிய முறையில் பதிவுத் திருமணம் செய்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த அநேகமானவர்கள் சமய அடிப்படையில் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

எனினும், சட்ட ரீதியாக பதிவுத்திருமணங்கள் செய்து கொள்ளப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலமாக நிலவி வந்த யுத்தத்தினால் அநேகமானவர்கள் சமயமுறைகளின் அடிப்படையில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டுள்ளதாக திருகோணமலை சட்ட உதவி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முறையாகத் திருமணம் செய்து கொள்ளாத காரணத்தினால் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த அதிகமான மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக, பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும்போது, இடம்பெயர் மக்கள் நலத்திட்டங்களை பெற்றுக் கொள்ளும்போது, நிவாரணங்களை பெற்றுக்கொள்ளும் போது இவ்வாறு நெருக்கடி நிலைமைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

பிறப்பு அத்தாட்சி பத்திரங்களின்றி மாணவர்களை பாடசாலைகளில் சேர்ப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்ட ரீதியாக திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளாதவர்களுக்கு சட்ட உதவி ஆணைக்குழு பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# தனியார் பேருந்துகளுக்கு தகுதியான இடம் ஒதுக்கப்படும்

## அமைச்சர் சீ.பி.ரட்ணாயக்கா தெரிவிப்பு



(கொழும்பு)

வெள்ளவத்தையிலிருந்து யாழ். செல்லும் தனியார் பஸ்களுக்கு தகுதியான இடமொன்றை ஒதுக்கித்தர ஏற்பாடு செய்யப்படும் என தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சீ. பி. ரட்ணாயக்கா தெரிவித்துள்ளார்.

இரவு 7.30 முதல் 9.30 மணிவரை வெள்ளவத்தை ஐ.பி.சி.கடற்கரை வீதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்படுவதற்காக தரித்து நிற்பதற்கான அனுமதி பெற்றுக் கொடுத்தால் போதுமானது என யாழ். கொழும்பு தனியார் போக்குவரத்து சங்கத்தின் தலைவரும் யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத்தின் தலைவருமான பொன்னுத்துரை கங்காதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் வெள்ளவத்தையிலிருந்து யாழ்- நோக்கி செல்லும் பஸ் வண்டிகள் தரித்து நிற்பது தடை செய்யப்படும் என வெள்ளவத்தை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பம்பலப்பிட்டி புகையிரத நிலையத்தருகே கடற்கரை பகுதியிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து புறப்படலாம் என பொலிஸார் நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர். இந்த நிலையில் தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன, அமைச்சர் சீ.பி.ரட்ணாயக்கவுடனும் இது குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

பகல் வேளைகளில் பஸ் வண்டிகளை வேறு பகுதிகளில் நிறுத்தி வைத்த பின்னர் புறப்படுவதற்கு சற்று முன்னதாக சுமார் 7.30 மணிக்கு வெள்ளவத்தையில் ஐ.பி.சி. வீதியில் தரித்து நிற்க அனுமதி தர வேண்டும் என பேருந்து உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-2)

# மின் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிடுகிறது

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் மின்சாரக்கட்டணத்தை அதிகரிக்க தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யப்படுவதால் மின்விநியோகத்தினை மேற்கொள்வது கடினமாக உள்ளதாக சுட்டிக்காட்டிய அவர் நீரேந்துப் பகுதிகளில் மழை இல்லாததால் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக எரிபொருளைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மின்சார சபை கடந்த சில மாதங்களில் கோடிக்கணக்கில் நட்டம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுவதாகவும் இதனால் தேர்தலின் பின்னர் அரசாங்கம் மின் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் சுட்டிக்காட்டினார். (4-2)

# கோப்பாய் வடக்கு முதியோருக்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலரின் ஆலோசனைக்கமைவாக கோப்பாய் வடக்கு கிராம த்தில் முதியோர்களுக்கான சங்கம் ஒன்று ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து முதியோர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (4-12)

# அரசியல் பயங்கரவாதம் இன்னமும் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**புலிகளின் அரசியல் பயங்கரவாதம் இன்னும் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. எனவே, தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் இராணுவத்தைப் பலப்படுத்த வேண்டுமே தவிர எக்காரணம் கொண்டும் குறைக்கக் கூடாது. குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை இன்னும் பல ஆண்டுகளுக்கு உஷார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

எனவே, சர்வதேசமோ தமிழ் அரசியல் கட்சிகளோ கூறுவது போன்று இராணுவ முகாம்களை வடக்கு, கிழக்கிலிருந்து அகற்றி விட முடியாது. இவ்வாறு கூறுவது மீண்டும் பயங்கரவாதிகளுக்கு இடமளிப்பதற்காவே தவிர வேறு ஒன்றும் கிடையாது என்றும் இவ் இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கூறுகையில்,

புலிகளின் ஆயுதப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள போதிலும் பிரபாகரனின் அரசியல் பயங்கரவாதம் இன்னும் ஒழிக்கப்படவில்லை. இதனை ஒழிப்பதாயின் பரந்தளவிலான நடவடிக்கைகள் அவசியம்.

இன்று உள்நாட்டில் மாத்திரமின்றி சர்வதேச அளவிலும் புலிகளின் அரசியல் பயங்கரவாதம் தீவிரமடைந்துள்ளது. இதனை முற்றாக ஒழித்துக்கட்டினால் மாத்திரமே புலிப் பயங்கரவாதம் முற்றாக அழிந்ததாக கருத முடியும்.

இன்று இலங்கை முன் உள்ள சவாலும் அதுதான். புலிகள் சர்வதேச அளவிலும் உள்நாட்டு அரசியலிலும் தமிழீழத்தை நோக்கிய பயணத்தை முன்னெடுத்து வருகின்றனர். இதனை தோல்வியடையச் செய்ய வேண்டும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் படையினரை வெளியேற்றுவது என்பது நாட்டிற்கு பாரிய அச்சுறுத்தலான விடயமாகும்.

புலிகளின் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் உள்நாட்டில் உலாவும் தமிழ் அரசியல் கட்சிகளின் தேவையற்ற பிரசாரங்களுக்கு அரசு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்றும் அவர் கூறினார். (4-2)

# பாராங்கல் புரண்டதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கொழும்பு)

பாராங்கல் ஒன்று தன் நிலையில் இருந்து புரண்டு விழுந்ததில் அதில் புதையுண்டு குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக மரணித்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் கலஹா நகரில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பத்தில் பலியானவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாகிய 55 வயதுடைய காந்தி என்பவராவார். சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, தெல்தோட்டை குரூப்பை சேர்ந்த கூலிவேலை செய்யும் தொழிலாளி ஒருவர் வீட்டுத்தளம் வெட்டிக் கொண்டிருந்த வேளையில் அவருக்குப் பின்னால் இருந்த பாரிய கல் ஒன்று அவரின் மீது வீழ்ந்ததில் அதில் புதையுண்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கண்டி மாவட்ட நீதிவான் சம்பவம் இடம் பெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்ட பின்னர் அது விபத்தினால் ஏற்பட்ட மரணம் என தீர்மானிக்கப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-2)

# விபச்சார நிலையத்தை நடத்திய வந்த பெண்ணுக்கு சிறையில் ஆடம்பரவசதி

(கொழும்பு)

கொள்ளுபிட்டி லிபர்ட்டி பிளாஸாவில் விபச்சார நிலையமொன்றை நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ரோஸ்மேரி பெலிசியா பெரேரா (மெடம் ஜீனா) வெலிக் கடை சிறையிலிருந்து களுத்துறை சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வெலிக்க சிறைச்சாலையில் அவருக்கு ஆடம்பர வசதிகள் வழங்கப்பட்டிருந்ததை சிறைச்சாலை அதிகாரிகள் கண்டுபிடித்ததையடுத்த அவர் களுத்துறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலைகள் பெண்கள் பிரிவில் கடந்த சனிக்கிழமை தீ விபத்து ஏற்பட்டதையடுத்து அப்பகுதியை பார்வையிடச் சென்ற சிறைச்சாலை உயர் அதிகாரியொருவரே மெடம் ஜீனாவுக்கு ஆடம்பர வசதிகள் வழங்கப்பட்டிருப்பதை கண்டுபிடித்ததாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் மெடம் ஜீனா நேற்று திங்கட்கிழமை களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். அத்துடன் வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியிடமும் மேற்படி உயரதிகாரி இது குறித்து விசாரித்துள்ளார். (4-2)

# துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வவு.சிறுவர் அபி.கூட்டத்தில் தீர்மானம்

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வவுனியா மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம்வவுனியா மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் இடம்பெற்றபோது இத்தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் பல்வேறு நடவடிக்கைகளை சிறுவர் தொடர்பாக மேற்கொள்வதற்கும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் த.செல்வகுமார், வவுனியா மாவட்டத்தில் பாடசாலை மட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் அதிகரித்து செல்கின்றன.

அவை அனைத்தும் இரு தரப்பினரது சூமுக நிலை ஏற்பாட்டின் பிரகாரம் நீதியின் முன் செல்லாமல் தீர்க்கப்படுவதன் காரணமாக துஷ்பிரயோகங்கள் அதிகரித்து செல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே, துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் தரப்பினரை பக்கச் சார்பின்றி நீதியின் முன் நிறுத்துவதுடன் தண்டனையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை, மெனிக்பாம் வலயம் பூச்சியம் மற்றும் ஒன்றில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதன் காரணமாக மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்து செல்வதாகவும் தெரிவித்தமையினால் இவ்விடயம் தொடர்பிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அரசாங்க அதிபரினால் பணிப்புரை விடுக்கப்பட்டதுடன் பாதிப்படைந்த பிள்ளைகளை பெற்றோருடன் மீள் இணைப்பு செய்யும் வரை பராமரிப்பதற்கான தற்காலிக சிறுவர் பராமரிப்பு இல்லத்தின் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

அத்துடன் வவுனியா நகர பாடசாலைகளில் அதிகரித்து வரும் மாணவர்கள் மீதான துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கலந்தாலோசிக்கப்பட்டதுடன் இவ்வாறான பிரச்சினைகளுக்கு அனைவரும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (4-2)

# குடியியல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் திறப்பு விழா

(கொழும்பு)

வவுனியா நீதிமன்ற கட்டடத்தொகுதியில் அமைக்கப்பட்டு வந்த குடியியல் மேல் முறையீட்டு நீதிமன்றம் நாளை வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை காலை 2 மணிக்கு இந்நீதிமன்றம் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவினால் திறந்து வைக்கப்படவுள்ளதுடன் காலை 9 மணிக்கு கிளிநொச்சி நீதிமன்ற கட்டடத் தொகுதியும் திறந்து வைக்கப்படவுள்ளது.

நீண்ட கால இடைவெளியின் பின்னர் இயங்கி வரும் கிளிநொச்சி நீதிமன்றம் தற்போது நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு பின்புறமாகவுள்ள கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த நிலையில் சட்டத்தரணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்திருந்தனர்.

எனினும் தற்போது புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று நிறைவடைந்துள்ளமையினால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக புதிய கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது. (4-2)




# பட்டதாரிகள் நியமனத்தில் மௌனம் கலைக்குமா? மாகாண சபை

வடக்கு மாகாண அரச திணைக்களங்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளுக்கு போட்டிப்பரீட்சை நடாத்தப்பட்டு கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு நேர்முகத்தேர்வும் நடைபெற்று இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ளன.

ஆனால் இதுவரை எவருக்கும் நியமனம் வழங்கப்படவில்லை. இந்நிலைப்பாடு ஏற்கனவே வேலையற்ற பட்டதாரிகளாக உள்ளவர்களுக்கு மேலும் வெறுப்பு, விரக்தி நிலையை உருவாக்கியுள்ளது.

குறிப்பாக வன்னிப் பட்டதாரிகள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து உயர்கல்வியை நிறைவு செய்தவர்கள். இத்தொழில் வாய்ப்பு விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பவர்கள். ஆனால் வடமாகாண சபை எதுவித ஏற்பாடுகளும் இன்றி மௌனமாக உள் ளமை பட்டதாரிகளிடத்தே வெறுப்புணர்வையும் நம்பிக்கையீனத் தையுமே ஏற் படுத்தியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பது காலத்தின் தேவையாகும்.

*-பாதிக்கப்பட்டுள்ள பட்டதாரிகள்*

# உருத்திரகுமாரன் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பதற்கு அமெரிக்காவின் உதவி தேவை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமர் வீ.உருத்ரகுமாரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அமெரிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

உருத்ரகுமாரன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக உதவிகளை வழங்கியமைக்கான வலுவான ஆதாரங்கள் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த ஆதாரங்களை சமர்ப்பித்து அமெரிக்காவின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சில நாடுகளில் காணப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான கப்பல்களை உருத்ரகுமாரன் பராமரித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக நவீன ரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக உருத்ரகுமாரன் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை புலிகளுக்கு வழங்கியமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் படையினருக்கு எதிராகவும் வழக்குகளைத் தொடுக்கும் நடவடிக்கைகளை உருத்ரகுமாரன் ஆரம்பித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (4-2)

# கொக்குவில் இந்துவில் நடமாடிய நட்சத்திரதிலகம் திருமதி சுகிர்தலக்சுமி

*கொக்குவில் இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராகவும் ஆசிரியராகவும் கடமையாற்றி அமரத்துவம் அடைந்த திருமதி சுகிர்தலக்சுமி சுப்பிரமணியத்தின் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.*

எங்கள் குருநாதன் நன்றே வழிகாட்டினார். நாம் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என வாழ்ந்து காட்டியவர்களை மறக்க முடியுமா? வாழ்நாளெல்லாம் உழைத்தும் குன்றாத இளமையுடன் காட்சி தந்தவரைத் தள்ளிவிட முடியுமா? வாழ் வாங்கு வாழ்ந்து கொக்குவில் இந்து அன்னையின் மடியிலே தன் இறுதிக்காலம் வரை கால்பதித்து தூர தேசம் சென்றிட்ட போதும் நினைவோடு உறவாடியவர்.

உரிமையினைப் பகிர்ந்து கொண்டவர். எல்லோர் இதயத்திலும் மங்காத குலவிளக்காய் குடியிருப்பவர். நாங்களும் இவ்வாறு இருக்க வேண்டும் என எதிர்காலச் சந்ததிக்கு எண்ணம் தோன்றச் செய்த மங்காமணிக்கு திருவிளக்கு சுகிர்தலக்சுமி சுப்பிரமணியம் எமது ஆசான்.

பிறந்தவன் மண்ணில் வாழுகின்றான் என்றால் உயிருடன் இருப்பதல்ல. உயிர் இவ்வுலகை விட்டுச் சென்றாலும் உயிருள்ள ஜீவன்களில் வாழும் வாழ்வு, வாயால் பேசும் வாழ்வு தான் அவர் இங்கு விட்டுச் சென்றிருக்கும் பொக்கிஷம். கொக்குவிலில் வாழ்ந்த இவர் வாழ்விடத்திற்குப் பெருமை சேர்த்தவர். தனது வாழ்நாளில் 56 வருடங்களை கொக்குவில் இந்துவிலேயே கழித்தவர். 15 வருடம் மாணவியாய், 38 வருடம் ஆசிரியராய் மூன்று வருடம் பிரதி அதிபராக இருந்து இளைப்பாறியவர்.

தனது நீண்டகால வாழ்வில் கொக்குவில் அன்னையின் மடியில் வளர்க்கப்பட்டவராகையால், அன்னையின் வரலாற்றை முழுமையாக அறிந்தவர்.

எந்தக்காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் நடைபெற்றது. அதனைச் செய்தவர் யார்.? என்ற வரலாற்றுப் பின்னணியினைத் தனது தளர்வு ஏற்படும் வயதை அடைந்த போதும் தளராத முதுமையும் இளமையான உள்ளத்துடன் இளமைத் துடிப்புடனே பதில் கூறி தெளிவு பெறவைத்தவர்.

பாடசாலையின் ஆரம்ப வரலாறு அழிந்துவிடக் கூடாது என்ற திடமான மனதோடு நூற்றாண்டு காணவந்த போது பெருந்தகையார் தான் அறிந்தவர்க்கெல்லாம் எடுத்துரைத்து சிக்கல் இல்லாத அன்னை வரலாற்றைச் சமர்ப்பித்தவர்.

ஜேர்மனியில் உள்ள கொக்குவில் இந்து பழைய மாணவர்கள் நூற்றாண்டைக் கொண்டாட பிரதம விருந்தினராக அழைத்த போது கனடாவில் இருந்து பழுத்த பழமாகியும் பயமின்றிச் சென்று சிரத்தையுடன் சிறப்பித்ததுடன் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சரித்திரத்தைக் கட்டுரையாக சமர்ப்பித்ததும் இருக்கின்றார்.

இவ்வாறான செயல்கள் யாவும் பாடசாலையில் அவர் கொண்ட ஈடுபாடும் கொக்குவில் இந்து வளர்ந்து மகுடமாய்த் திகழவேண்டும் என்ற அவரது விருப்பைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது.

ஏன் எமது சொந்த மண்ணில் நடைபெற்ற நூற்றாண்டுப் பொலிவுகாண எவ்வளவு மகிழ்வோடு அன்னையின் மூத்த மகளாய் தம்பதி சமேதரராய் வந்திருந்து ஆறு நேர நிகழ்விலும் சலிக்காமல் கலந்தது மட்டுமல்லாது தானும் ஒருநாள் நிகழ்வில் தலைமையேற்று சழைக்காமல் மிடுக்குடன் நடத்திச் சென்றவர்.

இவை மட்டுமா பார்ப்போர் நிகழ்வினைச் செம்மை செய்தோர் கூட இடையில் விட்டுப்பிரிவர். ஆனால் தொடங்கும் நேரம் முதல் முடிபடைந்து பாடசாலைக் கீதம் பாடும் போது தானும் இணைந்து பாடி மகிழ்ந்து சென்ற அணையா விளக்கவர்.

பின்னோக்கியும் அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. தனது பாடசாலை மாணவப் பருவத்தில் நல்ல மாணவியாகத் திகழ்ந்ததினால் அன்னையிடமே ஆசிரியப் பணியையும் செய்தார். இவர் கண்ணியம் மிக்கவராகவும் இருந்தார். மாணவிகளின் ஒழுக்க நடவடிக்கையில் மிகவும் அக்கறையுடையவர். பாடசாலைக்குரிய ஒழுக்க விதிகளில் இருந்து தவறமுடியாது. அவ்வாறு தவறுபவர் வீடு செல்ல வேண்டியதுதான். பின் பெற்றோரின் மன்றாட்டமான வேண்டுகோளினால்தான், பின் பாடசாலை வரலாம். இவரைக் கண்டாலே மாணவ மாணவியர் பயப்படுவார்கள்.

ஒரு நல்லாசிரியருக்கு உரிய இலக்கணத்துடன் மிளிர்ந்தவர். அவர் சிரிக்கும் போதும் வாயைக் கையால் பொத்தியே அடக்கமாகச் சிரிப்பார். பெண்ணின் பெருந்தகை எங்கள் அம்மையவர். பாரதி கூறுவது போல் மக்களுக்கு வாத்தியாய், வளர்ப்புத்தாயாய், வைத்தியனாய் ஒக்கநயங் காட்டியவர்.

பாடசாலையின் ஆசிரியராக இருந்து சாதித்தது மட்டுமல்லாது இல்ல மெய்வல்லுநர் போட்டி ஏற்பட்டால் மைதானத்திலே தானும் ஒரு மாணவராகவே பாவித்து இறங்கி செல்லையா இல்லத்தை மேனிலையில் வைத்திருந்தவர். அன்று தொடக்கம் அணி நடை பெரும்பாலும் செல்லையா இல்லத்திற்கே அமைந்துவிடும்.

ஆடி ஓடி விளையாடும் நங்கையாகக் கூட விளங்கியவர். ஆடாமல் அசையாமல் அழகு பொம்மையாய் அவர் நடந்து வரும் காட்சி மனதில் நிழலாடுகின்றது. யாரிடமும் அவரைக் கேட்டால் பொல்லாதவர் என்று கூறவே மாட்டார்கள். கண்டிப்பானவர் என்பார்கள். அந்தளவிற்கும் பெருமை மிக்க பெண்மணியாக வையத்துள் வாழ்வாங்கு வாழுபவர்.

தனது இளமைக் காலத்திலிருந்து இறக்கும் வரை கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். கற்றல் மட்டுமன்றி கொடுத்



தார்க்குக் குறைவில்லை... அதிலும் அன்ன சத்திரங்கள் ஆயிரம் அமைப்பதிலும் ஆங்கோர் ஏழைக்கு கல்வி கற்பிப்பதன் பெருமையை, தர்மத்தை உயர்ந்ததினால் அவர் பிள்ளைகளும் இன்று கல்லூரியின் வளர்ச்சிக்காய்ப் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

சந்திரனின் ஜோதியாய் தனிப்பெரும் முதலாய் அன்னையின் கனவெல்லாம் எங்ஙனும் மறைந்தது கண்டிலேன்... என்பதற்கு அமைய கொக்குவில் இந்து மேலும் மேலும் மேலோங்கி வளரும். அது உள்ள வரை உங்கள் நினைவும் நிலைத்திருக்கும். பிரதி அதிபர்களில் முதலாவது பெண் பிரதி அதிபராகத் திலகமாக விளங்கினீர் கள். பாடசாலையில் நீங்கள் நடந்த பாதை யில் நடந்துவரும் மக்களில் என்றும் வாழ் ந்து கொண்டிருப்பீர்கள் என்பது உண்மை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

**திருமதி. கலா சுந்தரேசன்,**
**பகுதித்தலைவர்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

# நாட்டில் 65 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படாமலுள்ளன

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களை, வேறு சிறுவர் இல்லங்களுக்கு மாற்றுவதற்கு சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பொலிஸார் இணைந்து இதனை நடைமுறைப்படுத்த உள்ளதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது பதிவு செய்யப்படாத 65 சிறுவர் இல்லங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சிறுவர் இல்லங்களை சோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் மேலும் கூறினார்.

(4-2)

# இலங்கை-இந்திய கப்பல் சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கை-இந்திய பயணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்கோஷியா பிரின்ஸ் கப்பல் நேற்று முன்தினம் இரவு கொழும்பு துறைமுகத்தில் இருந்து தூத்துக்குடி வரையான தனது பயணத்தை ஆரம்பித்ததாக கப்பல் போக்குவரத்துப் பணிப்பாளர் சாந்த வீரக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

கப்பல் எஞ்ஜினில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே இந்த போக்குவரத்து சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

குறிப்பிட்டளவு பயணிகளுடன் இந்தக் கப்பல் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இந்த இலங்கை- இந்திய கப்பல் சேவை 30 வருடங்களின் பின்னர் கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(4-2)

# இரத்தம், வியர்வை சிந்தி கட்சியை வளர்த்தெடுத்தேன்

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

பண்டாரநாயக்க பெயரை இல்லாதொழிப்பதற்கு பாரிய சதித்திட்டமொன்று தீட்டப்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகருமான எஸ்.டபி ள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் நினைவு நிகழ்வுகள் கடந்த 25ஆம் திகதி அத்தன்கல ஹொரகொல்லவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன, முன்னாள் ஜனாதிபதியின் புதல்வியுமான சந்திரிக்கா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கட்சித் தலைமையகத்தில் சந்திரிக்காவின் படம் அகற்றப்பட்டுள்ளது. தந்தை , தாய் மற்றும் நான் தொடர்ச்சியாக 62 ஆண்டுகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமை தாங்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளோம்.

தற்போது கட்சிக் கூட்டங்களில் எனது பெயரைக் குறிப்பிடுவதில்லை. எனினும் வீதியில் இறங்கினால் மக்கள் பேராதரவு வழங்கி வருகின்றனர்.

அந்தக்காலம் போன்று தற்போது இல்லை என மக்கள் அதிருப்தியை வெளியிடுகின்றனர். இரத்தம், வியர்வை சிந்தி இந்தக் கட்சியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றேன். எனினும் அமைச்சர்கள் என்னிடம் பேசுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் பண்டாரநாயக்கவின் ஐம்பதாம் நினைவு நிகழ்வுகளில் கட்சியின் பொதுச் செயலாளர் கலந்து கொள்ளவில்லை என சந்திரிக்கா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் மஹாராஜா குழும நிறுவனத்தின் தலைவர் ராஜமகேந்திரனுடன் தாம் நட்புறவைப் பேணியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(4-2)

# விவசாயி நமது வளர்ப்புத் தாய்



## ஆன்மீகம் 54

திரு.கார்த்திகேயன்,"விவசாயம் செய்கிற போது இருக்கின்ற பிரச்சினை ஆட்கள் கிடைப்பதில்லை என்பதுதான்" என்று சொன்னார். நம் தேசத்தில், 60% மக்கள் விவசாயம் செய்கிறார்கள். இந்த 60% விவசாயிகளின் பங்களிப்பு நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் 18% மட்டுமே. இத்தனை குறைவாக பங்களிப்பு இருக்கின்றபோது, அரசின் திட்டங்களில் வழியே வரும்போதும், செல்லும் போதும் எப்படிப் பயிரிடுகிறார்கள், எந்த அளவிற்கு காய் வருகிறது என்பதைப் பார்த்துக் கொண்டே வருவேன். கலப்பின தக்காளி பயிரிடுபவர்கள், ஒரு ஏக்கரில் சாதாரணமாக 18 - 22 டன் சாகுபடி செய்கிறார்கள். ஆனால், இஸ்ரேலில் அதே ஒரு ஏக்கரில் 140 டன் சாகுபடி செய்கிறார்கள். இஸ்ரேலில் நல்ல வளமான வேண்டியுள்ளது. ஏனென்றால் நம்முடைய உற்பத்தியளவு, நாம் பயிரிடும் காலம், இப்படிப் பல காரணங்கள் இருக்கிறன.

திரு.நம்மாழ்வார் போன்ற அனுபவம் மிக்கவர்கள் இருக்கிறார்கள். கோவை வேளாணமைப் பல்கலைக் கழத்தில் விவசாயம் செழித்திட அற்புதமான பல செயல்களை செய்திருக்கிறார்கள். ஆனால், அவை பல்லைக்

### நம்மவர்கள் ஒரு ஏக்கரில் 20 டன் உற்பத்தி செய்தால் இஸ்ரேலியர்கள் ஏக்கருக்கு 140 டன் உற்பத்தி செய்கிறார்களே எப்படி?

விவசாயிகளுக்கு முன்னுரிமை கிடைக்காது. ஏனெனில் தகவல் துறையில் குறைவான நபர்களே பணிபுரிந்த போதும் ஒட்டு மொத்த உற்பத்தியில் அவர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கிறது. ஆனால், இத்தனை விவசாயிகள் உழைத்து குறைந்த அளவே (18%) பங்களிக்கின்றனர். ஆனால், அவர்கள்தான் மக்களுக்கு உணவளிக்கிறார்கள். சமூகத்திற்கு உணவு அளிப்பது என்பது மிகமிக முக்கியமானது. அதை நாம் மறந்து விடாமல் கவனித்தாலும் இந்த 60% மக்கள் ஒட்டுமொத்த உற்பத்தியில் 18%தான் பங்களிப்பு செய்கிறார்கள் என்பது ஆரோக்கியமானதல்ல. இதை மாற்ற வேண்டுமென்றால் விவசாயத்தில் மாற்றங்கள் கொண்டு வந்தாக வேண்டும்.

ஆலாந்துறை பகுதியில் தக்காளி பயிரிடுகிறார்கள். நான் அப்பகுதி மண் இருக்கிறதா? அவர்கள் பாலைவனத்தில் இருக்கிறார்கள். வருடம் முழுவதும் என்ன கேட்டாலும் கொடுக்கிற வளமான மண்ணில் நாம் இருக்கிறோம். அவர்களுக்கு இந்த வளமான மண் கிடையாது. அவர்கள் 140 டன் உற்பத்தி செய்யும்போது நாம் 18-22 டன் உற்பத்தி செய்கிறோமென்றால், நம்முடைய உற்பத்தி விலை நிச்சயமாக அதிகமாகத்தானே இருக்கும்! இதே உற்பத்தியை வேறு விதமாகச் செய்தால் அப் பொழுது விலை கேட்க வேண்டிய தேவை யாருக்கும் இருக்காது. நாம் எங்கு வேண்டுமானாலும் அனுப்பலாம். நம்மிடம் ஒரே ஒரு மாட்டு வண்டி அளவு தக்காளி இருப்பதால் எங்கேயும் கொண்டு போக முடிவதில்லை. குறைந்த அளவே உற்பத்தி செய்தால் எங்கே போவது? யாராவது இரண்டு ரூபாய்க்குக் கேட்டாலும் கொடுத்துவிட கழகத்தோடு நின்றுவிடுகின்றன. விவசாயியிடம் சென்று சேர்வதற்கான அமைப்பினை உருவாக்கவில்லை. விவசாயத்திற்கு என்றொரு விஞ்ஞானம், தொழில் நுட்பம் இருக்கிறது. ஆனால், அவை ஒவ்வொரு விவசாயிக்கும் சென்று சேர்கின்ற மாதிரியான, தேவையான ஒரு கட்டமைப்பு முறையினை ஏற்படுத்த வேண்டும். விவசாயி என்ன செய்ய வேண்டும்? அவர் பயிரிட வேண்டும். ஆனால், அவருக்கு சந்தைப்படுத்தல் பற்றியோ, இன்னொரு நாட்டிற்கோ, மாநிலத்திற்கோ அனுப்புவது பற்றியோ சந்தை எங்கே இருக்கிறது என்பதையோ புரிந்துகொள்கிற திறமை இல்லை. அதற்கு இன்னொரு கட்டமைப்பு முறை வேண்டும். அது நம்மிடம் நிச்சயம் இல்லை. இப்போது முக்கியமாக, நல்ல விலை ஏன் கிடைக்கவில்லையென்றால், நீங்கள் உற்பத்தி செய்த பொருளை, தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான வசதியோ, இருப்பு வைப்பதற்கான இடமோ, சந்தையோ இல்லாததுதான். அதற்கான வாய்ப்புக்களை நாம் உருவாக்கிக்கொள்ள முடியும் ஆனால், நாம் தற்போது எங்கு சென்றாலும் எதிர் மறையாகப் பேசும் சிலரைக் கவனிக்கலாம். எதிர்மறையாகப் பேசுவது ஒரு இயக்கம், ஒரு புரட்சியென்று நினைக்காதீர்கள். ஒரு தொலை நோக்குப் பார்வையோடு, நேர் மறையாக இயக்கம் நடத்த வேண்டும் எதிர் மறையாக இல்லை. எவரோ ஏதோ செய்தால், நாமும் அதற்கு எதிர்மறையாகச் செய்வதை ஒரு கலாசாரமாகவே ஆக்கிவிட்டோம். உங்கள் ஊரில் தலைவராக வேண்டு மென்றால், நல்லகாரியம் ஒன்றுகூடச் செய்யத் தேவையில்லை. நீங்கள் நான்கு பையன்களை வைத்து சாலை மறியல் செய்யுங்கள் அல்லது யார் வீட்டிற்கும் குடிநீர் வராமல் குழாய்களை அடைத்து வையுங்கள் இதைச் செய்துவிட்டால் நீங்கள் உங்கள் ஊரில் தலைவனாகி விடுவீர்கள்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்


# தமிழ் அச்சு வரிவடிவத்திற்கான OCR முயற்சி

01

### தமிழ்மொழியும் அதன் முக்கியத்துவமும்

தமிழ் மொழியானது உலகெங்கும் பரந்து வாழும் ஏறத்தாழ மில்லியன் மக்களால் பேசப்படும் தொன்மை வாய்ந்த திராவிட மொழியாகும். சமஸ்கிருதத்தின் சிறிதளவான ஆளுமைக்குட்பட்ட தமிழ்மொழி இந்தியா, சிங்கப்பூர், கனடா, தென்னாபிரிக்கா ஐக்கிய அமெரிக்க நாடுகள், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள தமிழ் மக்களால் பேசப்படுகின்றது. முக்கியமாக இந்தியாவின் தமிழ் நாடு, ஸ்ரீறிலங்காவின் வடக்கு-கிழக்கு, மலையகப் பகுதிகளிலும் மலேசியா மற்றும் சிங்கப்பூரிலும் பிரதான மொழியாகப் பேசப்படுகிறது. திராவிட மொழிகளிலயே மிகவும் தொன்மை வாய்ந்த மொழி தமிழ் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். 2000 வருட சரித்திர வரலாற்றின்படி, (ஆதாரம்Motso-2006) தமிழ் என்பதன் அர்த்தம் தனித்துவமானது, இனிமையானது, குளுமையானது. என்பதாகும். (ஆதாரம் Sivasupramanium-2003)

இனி தமிழ் எழுத்துக்களின் ஆரம்ப தோற்றத்தையும் வடிவமைப்பையும் பார்க்க்குமிடத்து ஆரம்பத்திலே முதலாம் நூற்றாண்டிற்கு சற்று முன்னே தமிழ் எழுத்தானது பிராமி உடைய தெற்கத்திய பாணி



யிலே தோன்றியது. காலங்கள் செல்லச்செல்ல எழுத்துருவம் மாற்றம் அடைந்தது.

8 ஆம் நூற்றாண்டளவிலேயே தற்போதைய வடிவமைப்பை அண்மித்தது. ( ஆதாரம் Lawrence-2010)


தொடக்கத்தில் அசோக மன்னனின் காலத்தில் பிராமி எழுத்துருவைப் பெற்றிருந்த தமிழ் எழுத்தானது பின்னர் திரிபடைந்து நவீனமடைந்து

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

தமிழ்-பிராமி ஆக உருவாகி பின்னர் மீண்டும் திரிபடைந்து முன்னேற்றம் அடைந்து கிரந்த உருவில் உள்வாங்கப்பட்டு தமிழும் சமஸ்கிருதமும் எழுதும் எழுத்துருவாக மாற்றம் அடைந்தது. (ஆதாரம் Motso-2006)

இதன் பின்னர் 1990 களின் பின்னே

கி.மு. 3 ஆம் நூற்றாண்டு தொடங்கி காலந்தோறும் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவம்



தற்போதைய தமிழ் எழுத்துருவமானது அறிமுகப்படுத்தப்பட்டு, புத்தகங்களிலும் மற்றும் அச்சுருவில் வந்த ஆக்கங்களும் இந்தக்காலத்துக்கு முன்னரே அச்சடிக்கப்பட்டு வெளிவந்



ததன் காரணத்தால் இவற்றில் பாவிக்ப்பட்ட எழுத்துக்களையும் குறியீடுகளையும் கொண்டிருக்கின்றன. இவை இக்கட்டுரையின் Characters Considered பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளது. இப்படியான பல தொன்மையான புத்தகங்களும் எழுத்தாக்கங்களும் எமது எதிர்கால சந்ததியினரின் பாவனைக்காக பாதுகாப்பதற்கான சிறந்த வழி கணினி மயப்படுத்தலாகும். இதனால் சிறப்பாகப் பாதுகாப்பதுடன் இணையம் மூலமாக அதிகளவானோரின் பாவனைக்கும், தேடலுக்கும் உதவக்கூடியதாகவும் இருக்கும். அத்துடன் அவரவர் தேவைக்கேற்ப தரவுகளையும் விடயங்களையும் தொகுத்து அச்சிடக்கூடிய வசதியும் கணினிமயப்படுத்தலினால் ஏதுவாகும்.

இப்படிக் கணினிப்படுத்தலுக்கு ஒரு வழியானது அனைத்து புத்தகங்களையும் ஆவணங்களையும் ஒவ்வொரு வரிவரியாக கணினியில் Word document இல் பதிப் பதாகும். இது மிக வும் காலவிரயத்திற்குரியதும் கஷ்டமானதுமாகும்,

சபீனா தயானி தயானந்தன்

இதற்கான ஒரு மாற்று வழியே Optical Character Recognition (OCR) System ஆகும்.

(தொடரும்)

# கோடி பேருக்கு அன்னதானம் செய்த பலன் தரும் மரம்

தற்போது வீடுகளில் மரம் வைப்பது அபூர்வமாகி வருகின்றது. பெரும்பாலும் கிராமப் புறங்களில் மட்டும் தான் வீடுகளில் மரம் வளர்க்கிறார்கள். நகரங்களில் இடம் இருந்தாலும் கூட அலங்கார மரங்களையே வளர்க்கிறார்கள். அவர்கள் பலன் தரும் மரங்கள் வளர்ப்பது குறைந்து விட்டது.

வாஸ்துபடி வீடு கட்டுவதில் மரங்களுக்கு முக்கிய பங்கு உண்டு. சில மரங்களை வைப்பதால் வாஸ்து குறைபாடு நீங்கவும் வாய்ப்பு உள்ளது.

புன்னை, அசோகா, வேம்பு, சந்தனம், வாழை, தென்னை,மாமரம், பவளமல்லி, பன்னீர், பலாமரம், நாரத்தை மரங்கள் பொதுவாக நன்மை தரக்கூடிய மரங்களாகும்.

### வளர்க்கக்கூடாத மரங்கள்

அரசமரம், தூங்குமூஞ்சிமரம் , புளிய மரம், ஆலமரம்,முள் உள்ள மரம், இலவ மரம் போன்றவை பொதுவாக வீடுகளில் வளர்ப்பதில்லை.

நாம் வசிக்கும் மனையின் அளவைத் தள்ளி, தெருவில்இருக்கும் மரங்களுக்கு வாஸ்து கணக்கு பார்க்க வேண்டிய அவசியமில்லை.

வீட்டின் வாயிலுக்கு நேராக எந்த மரமும் அமையக்கூடாது. முள் உள்ள மரங்களும் இடி விழுந்த மரங்களும் புற்றுவைத்த மரங்களும் வீட்டில் இருந்தால் எதிரிகள் அதிகரிப்பார்கள். மன சாந்தி குலைந்து விடும்.

பொதுவாக வாசனைப்பூ பூக்கக் கூடிய செடி, கொடிகள், பவளமல்லி போன்றவை வீட்டின் முன்புறம் அமைவது விசேடம்.

### மரங்கள் அமைய வேண்டிய திசைகள்


வடகிழக்கில் உயரமான மரங்கள் மற்றும் அதிக எடை கொண்ட பெரிய மரங்கள் வைப்பதை தவிர்க்க வேண்டும். புல்வெளி, வாசனைப்பூ பூக்கக்கூடிய செடி, கொடிகள்போன்றவை அந்த திசையில் அமைவது நன்மை தரும். வட கிழக்கில் புல்தரை அமைத்தால் பூமி உயராமல் பார்த்துக் கொள்வதும் அவசியம். தென்மேற்கில் உயரமான மரங்கள் வளர்க்கலாம்.

### அரச மரத்தில் உள்ள தெய்வீக அம்சங்கள்.

அரச மரத்தின் வேர்ப்பகுதியில் பிரம்மாவின் தெய்வீக அம்சமும் நடுப்பகுதியில் விஷ்ணுவின் அம்சமும் மேல் பகுதியில் சிவ அம்சமும் உள்ளது. இலைகளில் முப்பத்து முக்கோடி தேவர்களும் வசிக்கின்றார்கள்.

### அரச மரத்தடி பூஜையின் பலன்கள்

அரச மரத்தடியில் இருந்து ஜெபம் செய்பவர்களுக்கு மந்திர சக்தி எளிதில் கிடைக்கும். பத்மாவதி யக்ஷிணி மந்திரத்தை அரச மரத்தடியில் இருந்து ஜெபிக்க முக்காலமும் உணரும் சக்தி கிடைக்கும்.



அரச மரத்தடியில் இருந்து ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய கோடி பேருக்கு அன்னதானம் செய்த பலன் உண்டாகும். அரசமரத்தை சூரிய உதயத்துக்கு முன் சுற்றிவர புத்திர சந்தான பாக்கியம் உண்டாகும்.

அரச மரத்தடியில் இருக்கும் விநாயகரை பூஜிக்க அனைத்துத் தடைகளும் விலகி நீதிமன்ற வழக்கு வெற்றியடையும். அரச மரத்தடியின் கீழ் இருக்கும் அனுமனை பூஜிக்க கடன் தொல்லை தீரும்.

அரச மரத்தடியில் இருந்து பித்துருக்களுகளுக்கு பித்ரு கடன் செய்ய அனைத்து பித்ரு தோஷங்களும் விலகும்.

அரசும் வேம்பும் சேர்ந்து நட்டவர்களின் குலம் புகழ்பெற்று விளங்கும். அரசு, வேப்ப மரங்களுக்கு திருமணம் செய்ய மழை பொழியும். திருமணத் தடைகள் விலகும்.

## ஜோதிடக் களம்

# சித்திரையில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு சித்ரா என்று பெயர் வைக்கலாமா?

பொதுவாக நட்சத்திரத்தின்படி பெயரை வைப்பது வழக்கத்தில் உள்ளது. நட்சத்திரத்தின் படி கொடுக்கப்பட்டுள்ள பெயர் எழுத்தில் பஞ்சாங்கத்திற்கு பஞ்சாங்கம் சில வித்தியாசங்கள் காணப்படுகின்றது.

நட்சத்திரத்தின் படி வரக்கூடிய ஆரம்ப எழுத்தால் பெயர் வைப்பது அதிர்ஷ்டகரமாக கருதப்படுகின்றது. பலவீனமாக அமையப் பெற்ற ஜாதகர்கள் இதில் உள்ள சில பெயர்களை வைப்பதை தவிர்க்க வேண்டும்.

உதாரணமாக சித்திரையில் பிறந்த பெண்ணுக்கு சித்ரா என்று பெயர் வைப்பதும் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு சுவாதி என்று பெயர் வைப்பதும் ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு ரேவதி என்று பெயர் வைப்பதும் கிருத்திகை நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு கிருத்திகா என்று பெயர் வைப்பதும் தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் நதிகளின் பெயரான கங்கா, யமுனா, கோதாவரி, சரஸ்வதி, காவேரி, சரயு, நர்மதா போன்ற பெயர்களை வைப்பதையும் தவிர்க்க வேண்டும்.

அத்துடன் உக்ரமான தெய்வங்களான காளியம்பாள், சூலி, ஸ்ரீதுர்க்கா, பிரத்தியங்கரா போன்ற தெய்வங்களின் பெயர்களையும் அத்தகையவர்கள் தவிர்க்க வேண்டும்.

சில பூக்களின் பெயர்களை வைப்பதையும் தவிர்க்க சொல்கிறார்கள். தாமரை, மல்லிகா,செவ்வந்தி,அல்லி ஆகிய பூக்களை அதற்கு உதாரணமாக கூறலாம்.

அதேநேரத்தில் இராசியும் நட்சத்திரமும் சுபகிரகத்தால் பார்க்கப்பெற்றாலே வேறொரு விதத்தில் பூர்ண பலம் பெற்றாலோ இந்தப் பெயர்கள் வைத்தவர்கள் பிரபலமானவர்களாகவோ வெற்றியைருசிக்கக் கூடியவர்களாகவோ விளங்குவார்கள்.

# சவேந்திரவுக்கு எதிரான வழக்கை சாதகமாக பயன்படுத்த வேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கைப் பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வாவிற்கு எதிராக நியூயோர்க் நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

புலம்பெயர் தமிழர்களால் இந்த வழக்கை பயன்படுத்தி பதிலளிக்க முடியும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைகளை வெற்றிகரமாக எதிர்நோக்குவதற்கு தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்கும் என அவர் உறுதியளித்துள்ளார்.

சட்டத்தலணி உதவிகள் தேவையென்றால் இலங்கை சட்டத்தரணிகள் குழாமொன்றை அனுப்பி வைக்கத் தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சவால்களை இலகுவில் முறியடிக்கக்கூடிய ஆற்றல் சவேந்திர சில்வாவிடம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கிழக்கு கட்டளைத் தளபதி கேணல் ரமேஷின் மனைவி வத்சலாதேவியினால் சவேந்திர சில்வாவிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைகளின் போது இலங்கையின் மெய்யான நிலைமைகளை உலகிற்கு வெளிப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கையில் என்ன நடந்தது என்பது பற்றி சர்வ தேச சமூகத்திற்கு போதியளவு விளக்கம் கிடையாது எனவும் மூன்றாம் தரப்பினரின் தகவல்களின் அடிப்படையிலேயே சர்வதேச சமூகம் கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வேதச தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் பிரசாரங்களை முறியடிப்பற்கு வழக்கு விசாரணைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.



தமிழீழ விடுதலைப்புலிகளின் சகல விதமான தீவிரவாத செய்ற்பாடுகளையும் அம்பலப்படுத்த இதனை ஓர் சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ளப்போவதாக அமைச்சர் மைத்திரிபாலசிறி சேன குறிப்பிட்டுள்ளார். (4-2)

# பாலியல் துஷ்பிரயோகம் செய்த இராணுவத்தினருக்கு அபராதம்

## கொழும்பு நீதிமன்றம் விதித்தது

(கொழும்பு)

பாலியல் துஷ்பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு இராணுவ உத்தியோகத்தர்களுக்கு கொழும்பு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

யுவதி ஒருவரை அநாகரீகமான முறையில் பாலியல் ரீதியாக துன்புறுத்திய இரண்டு இராணுவ உத்தியோகத்தர்களுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு இராணுவ உத்தியோகத்தர்களும் நீதிமன்றில் பகிரங்கமாக மன்னிப்பு கோரியிருந்தனர். பாதிக்கப்பட்ட யுவதியிடம் மன்னிப்பு கோர வேண்டுமென நீதிவான் லங்கா ஜயரட்ன கோரியிருந்தார்.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி கொம்பனித்தெருவில் உள்ள கடைத் தொகுதியொன்றில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (4-2)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பண்டார நாயக்கவை மறந்துவிட்டனர்

## முசம்மில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அதன் ஸ்தாபகர் பண்டாரநாயக்கவை மறந்து விட்டதாக கொழும்பு மாநகரசபை வேட்பாளர் ஏ.ஜே.எம்.முசம்மில் தெரிவித்துள்ளார்.

ஸ்தாபகர் பண்டாரநாயக்க மற்றும் பழைய உறுப்பினர்களை கட்சி உதாசீனம் செய்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு காலி முகத்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற பண்டாரநாயக்க நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடலில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சிலை இன்னும் சில காலங்களில் அகற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு மாநாகரசபைத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4-2)

# சிங்களப் புலி சந்தேக நபர் விடுதலையானார்

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சிங்களப் புலி சந்தேக நபர் 4 வருடங்களின் பின்னர் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாது யாழ். மேல் நீதிமன்றால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ராகலவத்த 'கல்லுனு ஓயாவைச் சேர்ந்த நிகால் சேரசிங்க என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார். கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற் குறிப்பிட்ட பகுதியில் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு பின்னர் சி.ஐ.டி.யினரிடம் குறித்த நபர் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த நபர் தொடர்பாக யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்குகள் நடைபெற்று வந்த நிலையில் குறித்த நபர் தொடர்பாக குற்ற ஒப்புதல் வாக்கு மூலமே குற்றச்சாட்டாக வைக்கப்பட்டிருந்த நிலையில் குறுக்கு விசாரணையின்போது சட்டத்திற்கு ஏற்ப இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுபோதுமான ஆதாரம் இல்லை எனக் கருதி வேறு ஏதாவது சான்று இருக்கின்றதா என அரச சட்டத்தரணியிடம் வினவியபோது அதற்கு வேறு சான்று இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த நபர் இன்றைய தினம் யாழ். மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்குத் தொடர்பாக மனித உரிமைகள் சட்டத்தரணி றெமீடியஸ் ஆஜரானமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# இந்திய ரயில் என்ஜின்களை இயக்க இலங்கை ரயில் சாரதிகள் மறுப்பு

அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட இந்திய புகையிர என்ஜின்களை இயக்குவதிலிருந்து தாம் வாபஸ்பெறவுள்ளதாக புகையிரத என்ஜின் சாரதிகள் அறிவித்துள்ளனர்.

அண்மையில் அளவையில் ஏற்பட்ட புகையிரத விபத்துக்கான ரயில் சாரதிகளின் மீது சுமத்த, புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் சிலர் முற்படுவதாகவும் ஆனால் இந்தப் புகையிரத என்ஜின்களின் தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இவ்விபத்து ஏற்பட்டதெனவும் புகையிரதச் சாரதிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும் புகையிரதப் பொறியியலாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. (4-2)


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

22

SEPT. 2011 TO FEBRUARY 2012

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

● கல்முனை ● மட்டக்களப்பு ● திருகோணமலை ● புத்தளம் ● வவுனியா ● மன்னார் ● யாழ்ப்பாணம் ● கண்டி ● கொழும்பு ● ஹட்டன் ● அனுராதபுரம் ● நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011


# 2011.09 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1066-முதலாம் வில்லியம் இங்கிலாந்தை முற்றுகையிட்டான்.

★1448-முதலாம் கிறிஸ்டியன் டென்மார்க் மன்னனாக முடிசூடினான்.

★1687-கிரேக்கத்தின் பழங்காலக் கட்டடம் பார்த்தினன் குண்டு வெடிப்பில் சேதமடைந்தது.

★1708-ரஷ்யாவின் முதலாம் பீட்டர் மன்னன் சுவீடன் படைகளை லெஸ்னயா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தான்.

★1791-பிரான்ஸ் ஐரோப்பாவில் யூதர்களை அடிமைத்தளையில் இருந்து விடுதலையான முதலாவது நாடானது.

★1795-யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றின.

★1867-டொரொண்டோ ஒண்டாரியோவின் தலைநகரமாகியது.

★1867-ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைக் கைப்பற்றியது.

★1889-நிறை மற்றும் அளவைகளுக்கான பொது மாநாட்டில் மீற்றரின் நீளமானது பனிக்கட்டியின் உருகுநிலையில் 10 விழுக்காடு இரிடியம் கலந்த பிளாட்டினம் கலவையின் கோள் ஒன்றின் இரண்டு கோடுகளிற்கிடையேயான நீளத்துக்கு சமனாக அறிவிக்கப்பட்டது.

★1895-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தற்போதைய கட்டடம் கட்டப்பட்டது.

★1928-அலெக்சாண்டர் பிளெமிங் பெனிசிலினைக் கண்டுபிடித்தார்.

★1939-நாசி ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போலந்து நாட்டை தமக்குள் பங்கு போட உடன்பட்டன.

★1939-இரண்டாம் உலகப் போர்: போலந்தின் தலைநகர் வார்சா ஜேர்மனியிடம் வீழ்ந்தது.

★1944-இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவப்படைகள் எஸ்தோனியாவில் இருந்து நாசிகளின் குளுகா வதை முகாமை விடுவித்தன.

★1950-இந்தோனேசியா ஐ.நா.வில் இணைந்தது.

★1958-பிரெஞ்சு ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டது.

★1960-மாலி, செனெகல் ஆகிய நாடுகள் ஐ.நா.வில் இணைந்தன.

★1961-டமாஸ்கசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் எகிப்து, சிரியா ஒன்றியமான ஐக்கிய அரபுக் குடியரசு முடிவுக்கு வந்தது.

★1994-பால்டிக் கடலில் சுவீடன் சென்று கொண்டிருந்த எஸ்தோனியப் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 852 பேர் கொல்லப்பட்டனர்.

★1995-பொப் டெனார்ட் மற்றும் சில கூலிப் படைகள் கொமரோஸ் தீவுகளைக் கைப்பற்றின.

### பிறப்புக்கள்

★1852-ஹென்றி முவாசான், பிரெஞ்சு வேதியியல் அறிஞர் (இ.1907)

★1929-லதா மங்கேஷ்கர், இந்தியப் பின்னணிப் பாடகி

★1947-ஷேக் ஹசீனா, வங்காளதேசத்தின் முன்னாள் பிரதமர்

★1982-அபினவ் பிந்திரா, இந்திய ஒலிம்பிக் வீரர்

★1982-அமெரிக்கா ஒக்ஃபோர், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★1895-லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவியலாளர் (பி.1822)

★1953-எட்வின் ஹபிள், அமெரிக்க வானியலாளர் (பி.1889)

★1956-வில்லியம் போயிங், அமெரிக்க வான்வெளி முன்னோடி (பி.1881)

★1970-கமால் அப்துல் நாசர், எகிப்திய ஜனாதிபதி (பி.1918)

★1989-பேர்டினண்ட் மார்க்கொஸ், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி (பி. 1917)


### சிறப்பு நாள்

★பசுமை நுகர்வோர் தினம்



★1978-பாப்பரசர் முதலாம் அருளப்பர் சின்னப்பரின் நினைவு தினம் (பி.1912)

# நவீன எண் சோதிடம்




## தனது குடும்பத்திற்கும் நாட்டிற்கும் பெருமைதேடித் தரக்கூடிய உயர்ந்த எண்ணங்களுடன் வாழ்வர் 57

### கேதுவின் பொதுப் பலன்

எண்கணித கணக்கின் படி எண்களில் 7 எண், கேது என்று அழைக்கப்படுகின்றது. ஞானம் மோட்சம் இரண்டிற்கும் அதிகாரம் பெற்றது கேது என்பதை நாம் அறிவோம். இது தெய்வீகமான, ஆண்டவனுக்குரிய எண் என்று அழைக்கப்பட்டு வருகின்றது. 7,16,25 போன்ற தேதியில் பிறந்தவர்கள் இந்தக் கேது ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

கலை, கலாசாரம், பண்பாடு போன்றவற்றில் இந்த ஏழு எண்காரர்கள் ஆர்வமும் நாட்டமும், திறமையும் கொண்டவர்களாக இருப்பர். கேதுவைப் போல கெடுப்பானுமில்லை, இராகுவைப் போல கொடுப்பானும் இல்லை என்று கூறுவது போல் சிலருக்குத் துன்பத்தைக் கொடுத்து விடுகிறது.

இந்த ஏழு எண்காரர்கள் சில நேரங்களில் கலகலப்பாக இருந்தாலும், தனிமையில் இருந்து சிந்தனையால் வருந்திக் கொண்டிருப்பர். பலரிடம் பழகினாலும் மனம் விட்டு எல்லா விடயங்களையும் கூறுவிடமாட்டார்கள். குறிப்பிட்ட சிலரைத்தான் நண்பராக வைத்துக் கொள்வர். இன்னும் சில ஏழு எண்காரர்களுக்கு உலகமே பொய்யாகத் தோன்றும். எல்லோரையும் ஏமாற்றுக்காரர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பர். "விதி அடிக்கடி என்னைச் சதிசெய்கிறது" என்று கூறுவர். உள்ளொன்று வைத்து உதட்டளவில் பேசத் தெரியாததால் இவர்களிடம் நண்பர்கள் அதிகம் சேர்வதில்லை. இவர்களுடைய பேச்சு, சில நேரங்களில் கண்டிப்பாகவும், கடுமையாகவும் இருக்கும். ஆனால் இவர்கள் உள்ளம் நல்லவை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களது பெயர் நல்ல எண்களில் அமைந்து விட்டால், வாழ்க்கை சிறப்பானதாக அமைந்துவிடும். அவ்வாறு சிறப்பானதாக அமையாவிட்டால் குடும்ப வாழ்க்கை குழப்பம் மிகுந்த வாழ்க்கையாக இருக்கும்.

இன்னும் சிலருக்குத் திருமணம் நடக்காது, தாமதித்துக் கொண்டே செல்லும். சிலருக்குத் திருமணம் ஆகி விவாகரத்து ஆகிவிடும். பார்ப்பதற்கு இவர்கள் முகம் சோகம், அமைதி, கலை உணர்வு, சிந்தனை ஆகியவை மாறிமாறிக் காட்சியளிக்கும். முழுமையான நிறைவோடு வாழ்க்கை அமையவில்லை என்ற ஏக்கம் என்றும் உண்டு. சந்தோஷமாக இருந்தால் விரைவில் திடீரென்று இவர்கள் மனதில் சோகம் குடி கொள்ளும். சில பணக்காரர்கள் கூட குடும்ப வாழ்க்கை சரியாக அமையவில்லை என்று வருத்தப்பட்டதை காணமுடிந்தது.

இந்த ஏழு எண்ணிக்கைகாரர்களின் 9 வகையானவர்களைப்பற்றி இனி பார்க்கலாம்.

### உடல் எண் 7 உயிர் எண் 1

7,16,25 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால் இவர்கள் கேது, சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்களாவர். ஏழு என்ற கேது இவர்களுக்கு நல்ல அறிவையும், நல்ல குணத்தையும் சிந்தனா சக்தியையும் கொடுத்து, உயர்ந்த மனிதராக உருவாக்கும். கவிதை, கதை, கலை, கலாசாரம் போன்றவற்றில் நாட்டம் உள்ளவர்களாக வாழ்வர். தன்னைச் சார்ந்தவர்களுக்கும், தனது குடும்பத்திற்கும், தனது நாட்டிற்கும் பெருமை தேடித்தரும் உயர்ந்த எண்ணங்கள் கொண்டவர்களாக வாழ்வர். இளமையில்லே காதல் வயப்படக் கூடியவர்கள். தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமான நல்ல எண்ணில் பெயர் அமைந்து விட்டால் நல்ல குடும்ப வாழ்க்கை நடத்தி சிறப்பாக வாழ்வர். பெயர் பொருத்த மற்று அமைந்திருந்தால் குடும்ப வாழ்க்கையில் திருப்தி பெற முடியாது தவிப்பர். சிலர் காதல் திருமணமும், அப்படிச் செய்த பின் அதனால் குழப்பமும், பிரிவும் ஏற்பட்டு வேதனை அடைகின்றனர். ஆனால், பெயர் பொருத்தமானதாக அமைந்தவர்கள் எவ்விதப் பங்கமுமின்றிச் சிறப்பாக வாழ்வர்.

ஈவு,இரக்கம் கொண்ட இவர்கள் தெய்வ நம்பிக்கையில் சிறந்து விளங்குவர். பிறருக்கு ஏற்படும் துன்பத்தைக் கண்டு தனக்கு வந்ததாக எண்ணி வேதனைப்படுவர் மத விடயங்களில் மிகுந்த நாட்டம் உள்ளவர்களாகவும், அதைப்பற்றி ஆய்வு செய்பவர்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

களாகவும் விளங்குவர். இதனால் பலர் இவர்களுக்கு வேதாந்தி என்று பெயர் சூட்டுவர். தனது மதத்தில் இவர்களுக்கு அளவற்ற நம்பிக்கை இருப்பதால் மதக் கோட்பாடுகள் அனைத்தும் வாழ்க்கையின் வழிகாட்டி என்று பின்பற்றுவர். மகிழ்ச்சியான நேரங்களில் சகஜமாகப் பழகினாலும் தனிமையில் இருக்கும் போது தனது வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை எண்ணி வருந்துவர்.

இன்னும் சிலர் குடும்ப வாழ்க்கை குழப்பமானதாக அமைந்து மன வேதனைப்படுவதையும் மறுமணம் செய்து கொள்வதையும் காணமுடிந்துள்ளது. ஆனால் பெயர் பொருத்தமானதாக நல்ல எண்ணில் அமைந்து விட்டால் நல்ல குடும்ப வாழ்க்கை, நல்ல பணவசதி, நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள் ஆகியவற்றைப் பெற்று வாழ்கின்றனர். இன்னும் சிலர் எல்லாவிதத்திலும் சிறப்புற்று வாழ்ந்தாலும், தனக்கு உடல் நிலை சரியில்லையே, மனநிலை சரியில்லையே, குடும்ப வாழ்க்கை சரியில்லையே என்று தன்னந்தனியாக அழுது கொண்டிருப்பர். எல்லோரிடமும் அன்பாகப் பழகும் இவர்கள் பிறருக்கு தீங்கு செய்யும் காரியங்களில் இறங்க மனம் கூசுவர்.

பார்த்த உடனே இவர்கள் நல்லவர் என்று மற்றவர்கள் புரிந்து கொள்ளும்படி பழகுவர். சில நேரங்களில் ஊமைபோல் இருந்தாலும்,பேசுகின்ற சந்தர்ப்பம் வரும் போது தனது கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுவர். வசீகரமான தோற்றம் உடையவர்கள்; எளிமையான ஆடை அணிந்தாற்கூடக் கவர்ச்சியாகவும், தூய்மையாகவும் காட்சியளிப்பர். ஆம்பரமான கவர்ச்சிப் பொருளில் இவர்கள் மனம் நாட்டம் கொள்ளும். கலை சம்பந்தமான அனைத்து விடயங்களும் இவர்கள் மனதிற்குப் பிடித்தவையே. பிறருக்காக தனது நேரத்தை ஒதுக்கி உதவி செய்ய முன்வருவர். புகழ்ச்சிக்கு மயங்காத இவர்களை மற்றவர்கள் புகழ்ந்து பேசினால், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தனக்குத் தானே தீர்மானித்துக் கொள்வர்.

உண்மையைத் தவிர போலிகளை வெறுப்பதால் மற்றவர்களிடம் அபிப்பிராய பேதம் உண்டாகிக் கொண்டே இருக்கும் இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள், பலர் உத்தியோகமும், சிலர் சொந்தத் தொழிலும் செய்து வருகின்றார்கள். இவர்களுக்குக் கஷ்டம் வரும் போது ஆண்டவனை எண்ணிக் கொண்டே அழுவர். இவர்களுக்குக் பொருத்தமான எண்ணில் வாழ்க்கைத் துணைவர் அமைந்து விட்டால் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் பொருத்தமில்லாத வாழ்க்கைத் துணைவர் வந்தால் இவர்களது குடும்ப வாழ்க்கை குழப்பம் மிகுந்த வாழ்க்கையாக ஆகிவிடும்.

பெயர் பொருத்தமாக அமையப் பெற்றவர்கள் பெரும் பதவி வகிப்போர்களாகவும், சிறந்த டாக்டராகவும், இஞ்சினியராகவும், கலைத்துறை தேர்ச்சி பெற்றவராகவும், அரசியல் வாதியாகவும், வசதி படைத்த தொழில் அதிபர்களாகவும் வாழ்கின்றனர். இவர்களுக்குத் தனக்கு வரப்போகும் கெடுதலையும் நல்லவைகளையும் கனவின் மூலம் முன் கூட்டி அறிந்து கொள்ளும் ஆற்றல் இயற்கையில் இருக்கிறது. எப்பொழுதும் தனக்கு வரப்போகும் எதிர்கால வாழ்க்கையையும், கடந்த கால வாழ்க்கையைப் பற்றியும் சிந்தனை செய்து கொண்டு இருப்பர்.

உடம்பிற்கு ஒரு சிறிய வியாதி வந்தாலும் உடனே குழம்பிவிடுவர். பார்ப்பதற்கு தைரியசாலி போல் தெரிந்தாலும் மனபலம் குறைந்தவர்களே என்று கூறலாம். இவர்ளுக்கு "வழிபாட்டால், தமக்கு வரப்போகும் கெடுதல்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்" என்ற நம்பிக்கை உண்டு. ஆனால் பெயர் பொருத்தமாக அமையாதவர்கள் பல்வேறு வழியில் மனவேதனைப்படுவர். சிலருக்குக் குடும்பப் பிரச்சனையாக இருந்தாலும் பலருக்கு ஆரோக்கியம் பாதிக்கபட்டு வேதனை அடைவர். இதனால் பெயரை நல்ல எண்களில் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டு சிறப்புற்று வாழ முடியும்.

**தொழில்**

இந்த ஆதிக்கக் காரர்களுக்கு ஆடம்பரம் சம்பந்தமான பகட்டுப் பொருள் அனைத்தும் சிறந்தவையே; துணிவகைகள், நெருப்பு சம்பந்தமானவை, உலோகம் சம்பந்தமானவை, வாகனம், கல் சம்பந்தமானவை, கமிஷன், ஏஜென்சீஸ் போன்றவற்றால் முன்னேற்றம் அடைவர். ஆனால், பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் இவர்களது உழைப்பு மற்றவர்களுக்குப் பயன் பட்டுவிடும். அதோடு மேற்குறிப்பிட்ட தொழில்களினால் சிறந்த முன்னேற்றத்தைப் பெற முடியாது. பெயர் ஒழுங்காக அமைந்தவர்களுக்கு முன்னேற்றம் சிறப்பாக இருக்கும்.

**நோய்**

இவர்களுக்கு மனவியாதி, தேவையற்ற குழப்பங்கள் காரணமாக வியாதி, பல் சம்பந்தமான வியாதி, வயிற்றுக் கோளாறு, பெயர் ஒழுங்காக அமையாதவர்களுக்கு ஆப்பிரேஷன், இருதயவலி ஏற்படலாம் பெயரை 42 வருமாறு அமைத்துக் கொண்டால் நோய் உள்ளவர்கள் தனது நோயிலிருந்து விடுபடலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

கேது, சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிரனாகிய 6,15,24,33,42,51,60,69, போன்ற எண்களிலும் சூரிய ஆதிக்கமான 19,37,46,64 போன்ற எண்களிலும், பெயரை அமைத்துக் கொண்டு சிறப்புற்று வாழலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 6,2,1

யோகமான தேதிகள்- 6,15,24,1,10,19,28,2,11,20,29

யோகமான மோதிரக்கல்- மூன் ஸ்டோன், முத்து, வைடூரியம், தங்கபுஸ்பராகம், கனக புஸ்பராகம்,

யோகமான நிறம்- பச்சை, மஞ்சள், நீலம், சந்தன நிறம்

ஆகாத தேதிகள்- 9,18,27,8,17,26

ஆகாத் நிறம்- கறுப்பு,சிவப்பு

(தொடரும்)





யாழ்ப்பாண கல்வி வலய "விசேட பிரிவினரால் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத் துவரப்படுவதையும், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வெற்றியீட்டிய மாணவர்களுடன் நிற்பதையும்: அருகில் விசேட கல்விப் பிரிவுக்குப் பொறுப்பான ஆலோசகர் செல்வி சந்திரிகா, உதவிக் கல்வி பணிப்பாளர் என்.தயாளன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :-என்.குமார்)

# தேசியப் பிரச்சினை தொடர்பில் ஜே.வி.பி சரியான தீர்மானங்களை எடுக்கவில்லை

## ஜே.வி.பி.கிளர்ச்சிக்குழுவினர் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஆயுதப் போராட்டம் நடத்தும் திட்டம் கிடையாது என ஜே.வி.பி.கிளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர். இலங்கையில் மட்டுமின்றி உலக அளவிலும் ஆயுத போராட்டம் நடத்துவது புத்திசாதுரியமான தீர்மானமாக அமையாது என கிளர்ச்சிக் குழு ஊடகப் பேச்சாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.**

கடந்த காலங்களில் ஆயுத போராட்டங்களை நடத்துவதற்காக சந்தர்ப்பமும் சாத்தியமும் காணப்பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் கடந்த 1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்ததனைத் தொடர்ந்து அமெரிக்கா உலக அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டது என அவர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் ஆயுத போராட்டங்கள் எதுவும் வெற்றியடையவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆயுத போராட்டமொன்றின் மூலம் எதனையும் சாதிக்க முடியும் என கருதவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இது இலங்கைக்கு மிகவும் பொருத்தமானதாக அமையும் எனவும் மிக நீண்ட யுத்தத்தின் பின்னர் தற்போது மக்கள் நிம்மதியாக வாழ ஆரம்பித்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியை விட்டு விலகுவது தமது நோக்கமல்ல எனவும் தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என்பதே தமது பிரதான கோரிக்கை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அரசியல் விவகாரங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சில முரண்பாடான நிலைமைகள் ஏற்பட்டதனை மறுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக கட்சிக்குள் இவ்வாறான ஓர் முரண்பாட்டு நிலைமை நிலவி வருகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டு வைத்தமை, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு தேர்தலில் ஆதரவளித்தமை போன்ற பல்வேறு விடயங்களில் கருத்து முரண்பாடு நிலவியதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் கட்சி சரியான தீர்மானங்களை எடுக்கத் தவறியுள்ளதாகவும் குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஜே.பி.வி.யின் தீர்மானங்கள் திருப்தி அடையும் வகையில் அமையவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு குறிப்பிட்ட இனத்தின் தேசியவாத கொள்கைகளை எமது கட்சி பிரதிபலிக்கவில்லை என அவர் வலியுறுத்தியுள்ளார். பிரிவினைவாதத்தை நாம் எதிர்க்கின்றோம். எனினும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டியதுஅவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்துடன் கூடிய சமத்துவமான தீர்வுத் திட்டமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார். கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தேசிய மாநாட்டைக் கூட்டி தீர்வு காண முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (4-2)

# மாணவர்கள் கௌரவிப்பு

(இருபாலை)

நாவலர் மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய நான்கு மாணவ மாணவியருக்கு பாராட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நாவலர் மகா வித்தியாலய அதிபர் எஸ். சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவரும் வைத்தியருமான எஸ்.தெய்வேந்திரன், வைத்தியர் திருமதி.கே.தெய்வேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதோடு சித்தி பெற்ற மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் பணப்பரிசு வழக்கவுள்ளார்.

அத்தோடு எதிர்காலத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறவுள்ள மாணவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு 50 ஆயிரம் ரூபாவை வங்கியில் வைப்புச் செய்துள்ளார். (4-3-136)

# சிங்கராஜ வனப்பகுதியில் வீதி அமைப்பது தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

வீதி நிர்மாண நடவடிக்கை காரணமாக சிங்கராஜ வனத்திற்கு பாதிப்பு ஏற்படுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தக்குழுவினர் நாளை புதன்கிழமை வீதி நிர்மாணம் இடம்பெறும் பகுதியில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க தெரிவித்தார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை, வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் சுற்றாடல் துறை அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகளை உள்ளடக்கி இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவின் அறிக்கை விரைவில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் யுனெஸ்கோ அமைப்பிற்கு இது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரி வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் வீதி தொடர்பான முதற்கட்ட அறிக்கையை தயாரித்துள்ளதுடன் இதன்மூலம் சிங்கராஜ வனத்திற்கு பாதிப்புக்கள் ஏற்படாதென தெரிவித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கூறினார்.

சூரியகந்த வரை செல்லும் இந்தப் பாதையின் நிர்மாணப் பணிகள் சுற்றாடல் அமைச்சினால் தற்போது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (4-2)

# உலகளாவிய ரீதியில் 2 இலட்சத்து 50 ஆயிரம் சிறுவர் போராளிகள்

(கொழும்பு)

சிறுவர் போராளிகளுக்கு மறுவாழ்வளித்து மீண்டும் அவர்களை சமூகத்துடன் இணைப்பதில் அண்மைக்காலமாக இலங்கை முற்போக்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக மனித உரிமைக்கான பிரான்ஸ் தூதுவர் பென்ஸ் கோயில் யமரைல் தெரிவித்துள்ளார்.

மேலும் மியன்மார், கொலம்பியா, இலங்கை மற்றும் கொங்கோ போன்ற நாடுகள் பல்வேறுபட்ட அணுகு முறைகளை சிறுவர் போராளிகள் தொடர்பில் மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையினைப்போன்று உகண்டாவும் சிறந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின் படி உலகளாவிய ரீதியில் 2 இலட்சத்து 50 ஆயிரம் சிறுவர் போராளிகள் உள்ளதாக புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. (4-9)

# எயிட்ஸ் நோயை தடுக்க தேசியக் கொள்கை

எச்.ஐ.வி. எயிட்ஸ் நோயை தடுப்பதற்காக தயாரிக்கப்பட்ட தேசியக் கொள்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட இந்தக் கொள்கையின் கீழ் நாட்டில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனை தடுப்பதற்கான வழிமுறைகள் காணப்படுகின்றன.

தற்போது நாட்டிலுள்ள எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 0.1 வீதமாகும்.

புதிய கொள்கையின் கீழ் தாயிலிருந்து சிசுவிற்கு தொற்று ஏற்படுவதனை தடுத்தல், இரத்த பரிமாற்ற மூலம் நோய் தொற்றுதலைத்தடுத்தல் உள்ளிட்ட 10 பிரிவுகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளது.

இதற்காக சுகாதார பிரிவுகளுடன் இணைந்து விரிவாக செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (4-2)


உலக நாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், புடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

- மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
- கடல் உணவுகள், மருந்து பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
- வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர் திருமுருகன்கொம்நெற்

Head office.
259, K.K.S.Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirunagar, Main Road, Kilinochchi.
* No.46, Adiyapatham Veethy, Thirunelvely.
* TCN Express
2B, Nelsen place, Colombo 06.

கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
650/= ரூபாவிலிருந்து
நிபந்தனைகளிற்குட்பட்டது
Hot line :-0212227835



# வீரவில படைமுகாம் ஆயுத கிடங்கில் பாரிய தீ விபத்து

## சிப்பாய் உயிரிழப்பு

(கொழும்பு)

வீரவில படைமுகாமில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பாரிய வெடிப்புச் சம்பவத்தை அடுத்து முகாம்களில் பற்றிக் கொண்ட தீ நள்ளிரவுக்கு பின்னரும் எரிந்து கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறைந்த பிரபல சிங்கள நடிகர் காமினி பொன்சேகாவுக்கு சொந்தமான சனசும விடுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமிலேயே இந்த வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

அங்கிருந்த சிறிய ஆயுதக்கிடங்கிலேயே தீ விபத்து ஏற்பட்டதாக இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிகார் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

படையினர் தங்கியிருந்த பகுதியில் இருந்து சற்றுத் தொலைவிலேயே ஆயுதக் கிடங்கு அமைந்திருந்ததால் பாரியஉயிர் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து வீரவில படை முகாமில் இருந்த படையினரும் முகாமைச் சுற்றி யுள்ள பகுதிகளில் வசித்த பொதுமக்களும் பாதுகாப்பான பகுதிக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த ஆயுதக்கிடங்கிற்குப் பொறுப்பான அதிகாரியும் மேலும் இரு படையினரும் அங்கு சென்றபோதே வெடி விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் இரு படையினரும் காயங்களுடன் திரும்பியுள்ளதாகவும் தங்காலை பொலிஸ் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆயுதக்கிடங்கிற்குப் பொறுப்பான அதிகாரி பற்றிய தகவல் ஏதும் தெரியவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பற்றியெரியும் படைமுகாமுக்குள் படையினர் எவரேனும் சிக்கியுள்ளனரா என்பது பற்றி தகவல் ஏதும் தெரியவில்லை என்று கூறியுள்ள அவர் தீயினால் ஏற்பட்டுள்ள கடும் வெப்பமும் கரும்புகையையும் முகாமைச் சூழ்ந்துள்ளதாலும் தொடர்ந்தும் வெடிப்புகள் இடம்பெறுவதாலும் முகாமை நெருங்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வெடிப்பு நிகழ்ந்த முகாம் பிரதேசம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அருகில் உள்ள படை முகாம்கள் காவல் நிலையங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட பெருமளவு படையினரும் பொலிசாரும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வெடித்துச் சிதறிய ஆயுதக்கிடங்கிற்கு சற்றுத் தொலைவில் உள்ள ஏனைய இரு ஆயுதக்கிடங்குகளையும் பாதுகாப்பதற்கு இலங்கை இராணுவத்தின் சிறப்பு அணிகள் வீரவிலவுக்கு வான்வழியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வீரவில படைமுகாமில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த படைச் சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(4-2)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணுவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏஏஏ மூவிஸ் தலைவர் க.செவ்வேள், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி வே.பாலசுப்பிரமணியம், கௌரவ விருந்தினராக சர்வோதய நிறுவன திட்ட மிடல் அலுவலரும் பழைய மாணவருமான சி. இதயதீபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(4-2)

# ஜனாதிபதி அவசரமாக நாடு திரும்பியுள்ளார்

(கொழும்பு)

ஐ.நா.சபை பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று காலை நாடு திரும்பியுள்ளார்.

அமெரிக்காவில் தங்கியிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு நியூயோர்க்கில் மாவட்ட நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியிருந்ததாக முன்னர் தகவல் வெளியாகியிருந்தது. கேணல் ரமேஷின் மனைவி நியூயோர் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தேவி, எதிர் ராஜபக்ஷ வழக்கிலேயே மஹிந்தவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வழக்கை இலங்கை படைகளிடம் சரணடைந்த பின்னர் படுகொலை செய்யப்பட்ட கேணல் ரமேசின் மனைவி வத்சலா தேவியின் சார்பில் சட்டவாளர் வி.உருத்ரகுமாரன் கடந்த 22 ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார்.

கேணல் ரமேஷின் படுகொலை மற்றும் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர் என்ற அடிப்படையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவித்திருந்தன.

இந் நிலையில் ஜனாதிபதி அவசரமாக நாடுதிரும்பியிருப்பதன் பின்னணி இதுவாக இருக்கலாமோ என்று சந்தேகம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

(4-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## குங்குமப் பூ

**Botanical Name: Crocus Sativus**
**Family: Iridaceae**
**English: saffron**

### மருத்துவக்குணங்கள்

★ மருந்து தயாரிப்பிற்கு மேற்படி பெறப்பட்ட தரமான குங்குமப்பூக்களே பயன்படுத்தப்படவேண்டும். அதற்கு கலப்படமற்ற தரமான குங்குமப்பூக்கள் தேர்வு செய்யப்படவேண்டும்.

★ குங்குமப்பூவானது குழந்தைகளுக்கு பயன்படும் முக்கூட்டு மாத்திரை, கோரோசனை மாத்திரைகளிலும் முக்கிய மூலப் பொருளாக சேர்க்கப்படுகிறது.

★ இக் குங்குமப்பூக்களை உணவுப் பொருட்களிற்கு நிறமுண்டாக்குவதற்கும் மணமுண்டாக்குவதற்கும் சேர்ப்பதுண்டு. இதற்கு கரோடினொயிட் பசையை அல்பா குரோசின் தங்கமான மஞ்சள் நிறமே காரணமாகும். (α-crocin is a carotenoid-Pigment)

★ கர்ப்பிணித்தாய்மார்கள் குங்குமப் பூவை பயன்படுத்தினால் கர்ப்பம்தரித்து 5 மாதங்களின் பின்பு பயன்படுத்த வேண்டும். தாய்மார்கள் குங்குமப்பூவின் மருத்துவக் குணங்களை அதற்குரிய வைத்திய ஆலோசனையை பெற்றே பயன்படுத்த வேண்டும். ஏனெனில் மிகவும் குறைந்த கிறெயின் அளவிலேயே பயன்படுத்த வேண்டும். இதனால் பேறுவலி சுலபமாக்கப்படும். இரத்தம் சுத்திகரிக்கப்படும். கர்ப்பிணித்தாய்மார்களிற்கு தொற்றுக்கள் ஏற்படாமல் தடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

மேலும் பீற்றா கரோடினொயிட் காணப்படுவதால் கர்ப்பிணித் தாய்க்கும் குழந்தைகட்கும் மாலைக்கண்நோய் வராமல் தடுக்க



க்கூடியதாகவும்இருக்கும்.நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச் செய்யக் கூடியதாக இருக்கும்.

தவறுதலாக மக்கள் தாமாகவே நினைத்துக் கொண்டு அழகான குழந்தைகள் கிடைப்பதற்காக குங்குமப்பூவை பயன்படுத்துவது தவறாகும். குங்குமப்பூவை தகுந்த வைத்திய ஆலோசனையுடன் பயன்படுத்தின் அதன் மருத்துவ குணங்களின் தன்மையைபெறக் கூடியதாக இருக்கும்.

ஏனெனில் தரமான குங்குமப்பூக்கள் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. முதலில் தரமான குங்குமப்பூக்கள் தெரிவு செய்யப்பட்டு மருந்துக்கடைகளில் விற்பதற்கு அதற்குரிய அதிகாரிகளால் அனுமதிகொடுக்கப் படவேண்டும். மருந்துகளில் மூலப் பொருட்களின் தரம் மிகமிக அவசியமாகும்.

மேற்கூறிய வழிமுறையில் நடப்பட்டு, பயிரிடப்பட்டு, வளர்க்கப்பட்டு, அறுவடை செய்யப்பட்டு, உலர்த்தப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்ட குங்குமப் பூக்களில் மட்டுமே அம் மருத்துவச் செய்கைக்குரிய வேதியற் பொருட்கள் அடங்கி இருக்கும்.

எனவே மருந்துற்பத்திக்கோ ஆய்வுகூட ஆய்வுகளிற்கோ பயன்படுத்தப்படும் குங்குமப்பூக்கள் தரநிர்ணயம் (தூய தரமான சூலகத் தண்டு சூலகமுடி) மேற்கொள்ளப்பட்ட பின்னரே உள்வாங்கப்பட வேண்டும்.

கலப்படமான குங்குமப்பூக்கள் பாதமான விளைவுகளையும் ஏற்படுத்தலாம். எனவே குங்குமப்பூக்களைக் கொள்வனவு செய்து விற்க அதற்குரிய அதிகாரிகளால் அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

குங்குமப்பூவிற்கு கட்டிகளை கரைத்து புற்றுநோயை தடுக்கும் தன்மையும் உண்டு. (Saffron extract at a dose of 50mg / k.g.i.p could effectively modulate the antitumour activity of cisplatin in mice) The Wealth of India-page 241)அத்துடன் இதில் கரோட்டினொயிட்டு குரோசின் (Carotenoid crocin) காணப்படுவதால் புற்றுநோய் வராமல் தடுக்கக்கூடியதாக இருக் கலாம் (Anti-cancer)

எனவே கலப்படமான தரமற்ற குங்குமப் பூக்கள் விற்பதற்கு அதிகமாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் தரமான சுதேசமருந்துகளை மட்டுமன்றி சுதேச மருத்துவத்தின் தரத்தையும் மேம்படுத்துவதாக அமையும் என்பது அடித்தளமாகும்.

இற்றைக்கு 3000 வருடங்களிற்கு முன்பே ஞாழல்பூ என்று சித்தர்களால் குங்குமப்பூபயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவ்வளவு மருத்துவ குணமிக்க குங்குமப்பூவை தரமானதாக, தூயதாகவும் தெரிவு செய்து பயன்படுத்துவோமாயின் அதன் மருத்துவக்குணங்கள் அனைத்தையும் பெறக்கூடியதாக இருக்கும்.

தரமான குங்குமப்பூவைபெறுவதில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப் படவேண்டும்.

1. வளரிடம் வளரியல்பு
2. தரமான தண்டடிக்கிழங்கு (குமிழ்) இன விருத்திக்கு தெரிவுசெய்யப்படல்
3. பராமரிப்பு
4. அறுவடைக்காலம், அறுவடைவயது
5. சூலகத்தண்டு சூலகமுடி சேகரிக்கும் முறை
6. களஞ்சியப்படுத்தும் முறை
7. சேகரித்து வைத்திருக்கும் கால அளவு.

தரமான குங்குமப்பூக்களை பெறுவதற்கு மேற்கூறியநிலை ஆவணப்படுத்தப் படல் வேண்டும்..

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# குற்றமிழைத்த பொலிஸாரை மன்றில் ஆஜர்படுத்த வேண்டும்

## யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

யாழ். நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய பொலிஸார் ஏழு பேர் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாவிடின் தொடர்ந்தும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாகவும் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட நபர் ஒருவரை கடந்த 19 ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸார் தாக்கிய சம்பவத்தைக் கண்டித்து சட்டத்தரணிகள் சங்கத்தினர் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்பது வெளிப்படையான உண்மை. அவர்களை இன்றைய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் உயரதிகாரிகள் எமக்கு வாக்குறுதியளித்துள்ளனர்.

அவ்வாறு நீதிமன்றில் ஆஜர்படுத்தாவிடின் தொடர்ந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுத்துவதற்கு நேற்று முன்தினம் எமது கூட்டத்தில் முடிவெடுத்துள்ளோம்.

பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகள் சங்கத்தினரும் எமக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளார்கள்.

எது எவ்வாறெனினும் சட்டத்தின் முன் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்று கூறப்பட்டுள்ளது. (4-2)

# பேருந்து, லொறி மோதி பதினெட்டுப் பேர் காயம்

அநுராதபுரம் -யாழ்ப்பாணம் வீதியின் ராமகலே பகுதியில் பேருந்துடன் லொறியொன்று மோதியதில் சுமார் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த லொறியும் கலே பின்துனுவெவவில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ்விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது. (4-2)

# ஆதர் சீ கிளாக்கின் தொலைக்காட்டி ஒரு மில்லியன் ரூபாவிற்கு விற்பனை

(கொழும்பு)

ஆதர் சீகிளார்க்கிற்கு சொந்தமான தொலைக்காட்டி ஒரு மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பத்திரிகை விளம்பரத்தின் மூலம் விற்பனையாளர் ஊடாக குறித்த தொலைக்காட்டி விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஆதர் சீ கிளார்க்கின் பிரத்தியேக உதவியாளராக கடமையாற்றிய ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் அதனைக் கொள்வனவு செய்துள்ள நபர் இதுவரையில அதனை எடுத்துச் செல்லவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் புகழ்மிகு விஞ்ஞானியும், ஆய்வாளருமான ஆதர் சீ கிளார்க் பயன்படுத்திய தொலைக்காட்டி இலங்கையர்களுக்கு மாத்திரமல்லாது உலகிற்கே பெறுமதிவாய்ந்த ஒரு சொத்தென வானியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தத் தொலைக்காட்டியை எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் வைத்திருப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எவ்வாறாயினும் குறித்த தொலைக் காட்டியை தனியார் சொத்தாக மாற்றாது அரசாங்கம் அதனை பெற்றுக்கொண்டு பாதுகாப்பான இடமொன்றில் வைத்துப் பராமரித்து எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்வதற்கு வழி செய்ய வேண்டுமெனவும் வானிலை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (4-2)

# மாசுபட்ட பெற்றோலுக்கு நஷ்டஈடு வழங்க கால அவகாசம் நீடிக்கப்பட்டது

(கொழும்பு)

மாசுபட்ட பெற்றோல் காரணமாக பாதிக்கப்பட்ட வாகனங்களுக்காக நஷ்டஈட்டை செலுத்துவதற்கான ஆவணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு வழங்கப்பட்ட காலஅவகாசம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கனியவள அமைச்சினால் கடந்த 23 ஆம் திகதிக்கு முன்னர் கனியவள கூட்டுத்தாபனத்தின் விநியோக பிரிவிற்கு குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்காக அவசியமான ஆவணங்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டு குறித்த முறைப்பாட்டாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பும் நடவடிக்கை கடந்த 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அந்த பணிகளும் நிறைவடைந்துள்ளதாக விநியோக பிரிவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (4-2)

# கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்திற்கு நிர்வாகத் தெரிவு

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்பொழுது இயங்கி வரும் கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம் ஒன்று அமைப்பதற்கான பொதுக்கூட்டம் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் கடந்த 23 ஆம் திகதி காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேசத்தை சேர்ந்த 75 இற்கு மேற்பட்ட சங்கங்களிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.பரராஜசேகரம், பூநகரி பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.பரணிதரன், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் த.தேவிகபாலன் ஆகியோர் கலந்து கொண்டு சமாசத்தின் செயற்பாடுகள் பற்றியும் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் கருத்துரைகளை வழங்கினர்.

இதில் சமாசத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் தலைவராக கே.மணிவண்ணன், உபதலைவர் செல்வி தெ.பகீரதி, செயலாளராக இரா செல்வராசா, உபசெயலாளராக எஸ். நிலாஸ், பொருளாளராக இ.கலாநிதி அத்தோடு மேலும் 10 நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4-12-84)

# இலங்கைத் தமிழர்களை நாடு கடத்தும் நடவடிக்கைக்கு பிரித்தானியா கண்டனம்

(கொழும்பு)

இலங்கை தமிழர்கள் விடயத்தில் பிரித்தானியாவின் கொள்கையை சித்திரவதையில் இருந்து விடுதலை என்ற அமைப்பு கண்டித்துள்ளது.

இலங்கையில் தமிழர்கள் மீது தொடர்ந்தும் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் அகதிகளாக வந்தவர்களை பிரித்தானியா திருப்பியனுப்புவது எந்தவிதத்திலும் நியாயம் என்று சித்திரவதையில் இருந்து விடுதலை என்ற அமைப்பு கேட்டுள்ளது.

அகதிகளாக பிரித்தானியாவுக்குள் வந்த சில தமிழர்களை பிரித்தானியா இன்று புதன் கிழமை இலங்கைக்கு நாடு கடத்தவுள்ளது.

இது ஏற்றுக்கொள்ளதக்க செயலல்ல என்று குறித்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி கெய்த் பெஸ்ட் குறிப்பிட்டுள்ளார்.

சனல் 4 காணொளி இலங்கையில் போர்க் குற்றம் இடம்பெற்றமையை காட்டியது. ஐக்கிய நாடுகளில் நிபுணர் குழுவும் இந்த போர்க் குற்றச்சாட்டை நிரூபித்துள்ளது.

இதனைக்கொண்டு பிரித்தானியாவும் இலங்கை மீது மனித உரிமைகள் தொடர்பான அழுத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

எனினும் அந்த நாட்டில் இன்னும் தமிழர்கள் மீது மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்பதை பிரித்தானியா அவதானிக்க தவறிவிட்டது என்று பெஸ்ட் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களை சர்வதேச மன்னிப்பு சபை வெளியிட்டுள் ளமையையும் கெய்த் பெஸ்ட் சுட்டிக்காட்டியுள்ளார். (4-2)

# மரண அறிவித்தல்

## பிறின்ஸ் பிலிப்-மரியகொறற்றி லக்ஷினி (லக்ஷி)



பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய செல்வி லக்ஷினி 23.09.2011 வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் பிறின்ஸ் பிலிப்- கிறேஸ் யூலியானா (சாந்தினி) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், கியூறி மதுஷாவின் (நீர்கொழும்பு விஜேரட்ணம் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி) அன்புச் சகோதரியும், ராணி, மெற்றலீன் (நீர்கொழும்பு), காலஞ்சென்ற அஞ்சலீன் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற அலன்போல் (ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகளும், சறோஜா (கனடா), ராணி (கனடா), ரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகளும், ரதன், சுபேஸ்கா ஆகியோரின் தந்தை மோகன்ராஜ் அவர்களின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.09.2011) புதன்கிழமை நல்லூரில் உள்ள இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 9 மணிக்கு பண்டத்தரிப்பு சென்மேரிஸ் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பண்டத்தரிப்பு சென்மேரிஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
சி.ஏ.மோகன்ராஜ் (மாமா)
மேலதிக அரசாங்க அதிபர், முல்லைத்தீவு.
மோ.ஜக்குலின் (மாமி)

இல.08, செல்லர் லேன்,
செம்மணி றோட், நல்லூர்.

(6432)

PATRICIAN INSTITUTES
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

VACANCY
பதவி வெற்றிடம்
கணனி போதனாசிரியர்
COMPUTER INSTRUCTOR

மேற்படி பதவிக்கு தகைமை உள்ளவர்கள் 05.10.2011 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ விண்ணப்பங்களை அனுப்பவும்.
பின்வரும் பாடநெறிகள் கற்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

1. Computer Programming
2. Microsoft Office
3. DTP
4. Type setting
5. Computer Accounting
6. Web Multimedia
7. Video Editing
8. Graphic Design
9. Internet and E.mail

மேலதிக விபரங்களுக்கு:-
Register, Patrician Institute,
61(59),St.Patrick's Road, Jaffna.
T.p:-0212226148 Fax:-0212226148 E.mail: Spitee@Sltnet.lk

(C-4564)

# பேச்சுக்கு வருமாறு அழைத்த சலேயின் வேண்டுகோளை நிராகரித்தது எதிர்க்கட்சி

ஏமனில் இராணுவ தளத்தின் மீது பழங்குடியினர் நடத்திய தாக்குதலில் இராணுவ தளபதி ஒருவர் கொல்லப்பட்டார்.

ஜனாதிபதி ஆதரவிற்கு இராணுவ வீரர்கள் 30 பேர் சிறைபிடிக்கப்பட்டனர். இந்நிலையில் அதிகார மாற்றம் மற்றும் பேச்சுவார்த்தைக்கான ஜனாதிபதியின் அழைப்பை எதிர்க்கட்சிகள் நிராகரித்துவிட்டன.

சவுதி அரேபிய தலைநகர் ரியாத்தில் சிகிச்சை பெற்று வந்த ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே கடந்த 24 ஆம் திகதி எதிர்பாராத விதமாக நாடு திரும்பினார்.

ஏற்கனவே கடந்த ஒரு வார காலத்திற்கும் மேலாக ஜனாதிபதி எதிர்ப்பாளர்கள் மீது இராணுவம் கடுமையான தாக்குதல் நடத்தி வந்த நிலையில் ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னும் தாக்குதல் ஓயவில்லை.

இந்நிலையில் கடந்த 26 ஆம் திகதி ஜனாதிபதி சலே விடுத்த அறிக்கையில்,

வளைகுடா கூட்டுறவு குழுவில் பரிந்துரைத் தலைகளின்படி ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் நடத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த வரும்படி எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், எதிர்க்கட்சிகள் அவரது கோரிக்கையை நிராகரித்து விட்டன. இந்நிலையில் சனாவின் வடபகுதியில் உள்ள இராணுவத் தளம் மீது நேற்று முன்தினம் பழங்குடியினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 63 ஆவது படைப் பிரிவின் தளபதி கொல்லப்பட்டார். இராணுவ வீரர்கள் 30 பேர் சிறைபிடிக்கப்பட்டனர். (4-2)

# கிரிஸின் சிக்கன நடவடிக்கைக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பு



(எதென்ஸ்)

கிரிஸ் நாட்டில் அரசு மேற்கொண்டு வரும் சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து நேற்று முன்தினம் நாடு முழுவதும் பொலிஸ் உட்பட அனைத்துத் துறையினரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் யூரோ மண்டல கடன் நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் சர்வதேச நிதியமைப்பு புதிய திட்டம் ஒன்றை வகுத்து வருகின்றது.

ஐ.எம்.எப்.,ஐரோப்பிய யூனியன்,ஐரோப்பிய மத்திய வங்கி ஆகிய அமைப்புகளிடம் இருந்து கிரிஸ் பெற்ற கடன் தவணைகளுக்காக அரச ஊழியர் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை அந்நாடு அமுல்படுத்தி வருகின்றது. இதற்கு அந்நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.


தங்கள் எதிர்ப்பை பதிவு செய்யும் விதத்தில் நேற்று முன்தினம் நாடு முழுவதும் பாதாள புகையிரத டிராம் மற்றும் புறநகர் புகையிரத ஊழியர்கள், 24 மணி நேர வேலை நிறுத்தத்தில் ஈடுட்டனர். பொதுப் போக்குவரத்து ஊழியர்கள் பல மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தனர்.

விமான நிலையங்களில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு ஊழியர்களும் வேலை செய்ய மறுத்ததால் விமானப் பயணிகள் பெரும் அவதிக்குள்ளாயினர். இவர்களோடு கிரிஸ் பொலிஸ் துறையும் சேர்ந்து கொண்டது.

இதற்கிடையில் அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் உள்ள ஐ.எம்.எப். தலைமையகத்தில் நேற்று முன்தினம் யூரோ மண்டல கடன் நெருக்கடி தீர்வுக்கான கூட்டம் நடந்தது. இதில் ஐரோப்பிய நிலைத்த நிதி அமைப்பின் மொத்த நிதியான 440 பில்லியன் டொலர் என்பதை 2 டிரில்லியன் டொலர் அளவிற்கு அதிகரிக்க முடிவு எடுக்கப்பட்டது.

இன்னும் ஒரு சில நாட்களில் கடன் நெருக்கடிக்கு தீர்வு காணப்படும் எனவும் அத்தீர்வு ஐந்தில் இருந்து ஆறு வாரங்களுக்கு அமுல்படுத்தப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-2)

# 70 வருடங்களுக்கு முன்பு கடலில் மூழ்கிய கப்பலில் 240 தொன் வெள்ளி கண்டுபிடிப்பு



கடந்த 1940 ஆம் ஆண்டு டிசெம்பரில் எஸ்.எஸ். கெய்ர்சப்பா என்ற இங்கிலாந்து கப்பல் இந்தியாவில் இருந்து புறப்பட்டு இங்கிலாந்தின் லிவர்பூல் நகருக்கு சென்றது. கப்பலில் 240 தொன்கள் வெள்ளி, இரும்பு மற்றும் தேயிலை ஆகியவை ஏற்றப்பட்டிருந்தன.

கப்பல் 1941 பெப்ரவரி 17 இல் அயர்லாந்து நாட்டின் தென்மேற்கு பகுதிக்கு 300 மைல் தொலைவில் வந்த பொழுது பருவநிலை மற்றும் எரிபொருள் இல்லாமை ஆகியவற்றால் தத்தளித்துக் கொண்டிருந்தது.

அது 2 ஆம் உலகப்போர் நடைபெற்று கொண்டிருந்த சமயம். அதனை நடுக்கடலில் வைத்து ஜேர்மனி நாட்டின் நீர்மூழ்கி கப்பலான யு101 தாக்கி மூழ்கடித்தது.

இதில் ஒருவரை தவிர கப்பலில் இருந்த 85 பேர் கொல்லப்பட்டனர். தற்போது இந்தக் கப்பல் அட்லாண்டிக் கடற்படுகையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதில் 155 மில்லியன் பவுண்டுகள் மதிப்பிலான வெள்ளி இருப்பது தற்போது தெரியவந்துள்ளது. (4-2)




# பாகிஸ்தானில் புகையிரத இயந்திரத்திற்கு தட்டுப்பாடு

பாகிஸ்தானில் புகையிரத என்ஜினுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே அவற்றை இந்தியாவிடம் வாடகைக்கு வாங்கவுள்ளது. பாகிஸ்தானில் தீவிரவாதம் தலைவிரித்தாடுவதால் அங்கு பொருளாதார சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள புகையிரத நிர்வாகம் நசித்துள்ளது.

இங்குள்ளபுகையிரத என்ஜின்களில்பெரும்பாலானவை பழுதடைந்து விட்டது. அவற்றை சரிசெய்வதற்குஉரியஉதிரிப்பாகங்கள்இல்லை. ஏனெனில் அவற்றை வாங்க போதுமான நிதி ஆதாரம் இல்லை. இதனால் சுமார் 100 புகையிரதங்கள் இயங்காமல் நிறுத்தப்பட்டுள்ளன. இதைத்தொடர்ந்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, அயல் நாடான இந்தியாவிடம் 50 புகையிரத என்ஜின்களை பாகிஸ்தான் புகையிரத நிர்வாகம் வாடகைக்கு வாங்க முடிவு செய்தது.

அதன்படி பாகிஸ்தான் புகையிரத மந்திரி குலாம் அகமது பிலோர் இந்தியத்துறையிடம் பேச்சுநடத்திஒப்பந்தம்செய்துள்ளார். எனவே, 50 இந்திய புகையிரத என்ஜின்கள் பாகிஸ்தானுக்கு விரைவில் அனுப்பப்படவுள்ளன. (4-2)

# பாக்.இற்கு வழங்கப்படும் அமெரிக்காவின் உதவிகளை நிறுத்துவது பற்றி ஆராய்வு

பாகிஸ்தானின் உளவுப்பரிவு ஆப்கானிஸ்தானின் ஹக்கானி அமைப்புக்கு உதவி செய்து வருகிறது என அமெரிக்கா குற்றம் சாட்டியது. ஆனால் அதற்கு மறுப்பு தெரிவித்த பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் அமெரிக்காவையே குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் அனைத்து உதவிகளையும் நிறுத்தக்கோரும் தீர்மானத்தை அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாண ஆளுநர் டெட்போ அமெரிக்க பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார். தீர்மானத்தில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் அனைத்து உதவிகளையும் நிறுத்த வேண்டும் எனக் கோரி உள்ளார்.

இந்த தீர்மானத்தின் மீது அமெரிக்க பாராளுமன்ற வெளியுறவு குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று டெட்போ கூறினார். (4-2)



ஐ.நா.சபையின் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள லெபனான் பிரதமர் நஜிப் மிகாதி, அங்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதி ரப்பானி கொலையுடன் தொடர்புடைய முக்கிய நபர் கைது



ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ரப்பானி கொலையில் தலிபான்களுடன் தொடர்புடைய முக்கிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆப்கான் முன்னாள் ஜனாதிபதி பர்ஹனுதீன் ரப்பானி கடந்த 20 ஆம் திகதி பயங்கரவாதிகள் இருவரால் கொலை செய்யப்பட்டார். இக்கொலை குறித்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழுவை ஜனாதிபதி ஹமீத் கர்சாய் நியமித்துள்ளார்.

இந்நிலையில் ஹமீதுல்லா அகுண்ட் என்பவரை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளதாகவும் அவருக்கும் தலிபான்களுக்கும் தொடர்பிருப்பதாகவும் ஆப்கான் அரசு செய்தித் தொடர்பாளர் சிப்துல்லா சபி தெரிவித்துள்ளார்.

தலிபான்களுக்கும் ரப்பானி தலைமையிலான அமைதிக் குழுவுக்கும் இடையில் தூதுவராக அகுண்ட் செயற்பட்டுள்ளார். (4-2)

அறிவாளியின் ஒருநாள் வாழ்வு ஒரு முட்டாளின் முழு வாழ்க்கு சமமாகும்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அரசியல் ஆலோசனை சபை தமிழர்களுக்கு அவசர தேவை

ஆரோக்கியமான அரசியல் தலைமையும் இல்லை. பலமான புத்திஜீவிகளும் இல்லை எனில் தமிழ் இனம் எப்படித் தலைநிமிர முடியும்?

தமிழ் மக்கள் எவ்வளவுதான் இனத்துவப் பற்றுடையவர்களாக இருந்தாலும் தமிழ் அரசியல் தலைமைகள் விசுவாசமற்றவர்களாக இருப்பின் எதுவுமே செய்ய முடியாது.

இனப்பிரச்சினைக்கு எந்தவிதமான தீர்வு முயற்சிகளும் முன்னெடுக்கப்படாத நிலையில், இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திவரும் பேச்சுவார்த்தையை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பலமான முயற்சியாக காட்டிவருகின்றது.

ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு ஐ.நா செயலாளர் பான் கீ மூன் மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இருவருடனான சந்திப்பிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அரசு நடத்தும் பேச்சுவார்த்தை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் நடத்தும் பேச்சுவார்த்தையானது அரசை பாதுகாப்பதாக உள்ளதேயன்றி அதனால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்பது உறுதி.

இதிலிருந்து தமிழ் அரசியல் தலைமைகள் எந்தவிதமான இராஜதந்திரோபாயமும் இல்லாமல் தங்கள்பாட்டில் இயங்கிக் கொண்டிருப்பது தெளிவாகின்றது.

இத்தகைய நிலைமை நீடிக்குமாயின், அது வன்னிப் போரில் ஏற்பட்ட பேரழிவுகளைவிட மிக மோசமான இனஅழிப்பை தமிழ் இனத்திற்கு தந்துவிடும்.

இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் விழிப்பாக –அக்கறையாக இருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில், நாம் எங்கள் பற்றிய நினைப்பு இல்லாதவர்களாக இருப்போமாயின், நிலைமை மிக மோசமாக மாற்றமடையும்

எனவே தமிழ் அரசியல் தலைமைகளை வழிப்படுத்தக்கூடியதான அரசியல் ஆலோசனைச் சபையொன்று தமிழ்ப் புத்திஜீவிகளால் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

எழுதாத யாப்புகளுக்கு உட்பட்டதான தமிழ் அரசியல் ஆலோசனைச் சபையின் கருத்துரைப்புகளுக்கு அமைய தமிழ் அரசியல் தலைமைகள் செயற்படுவது கட்டாயம்.

அதேசமயம் எங்கள் இனத்தின் உரிமை தொடர்பில் எல்லை மாறி செயற்படும் அரசியல்வாதிகளை தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தவும் இந்த ஆலோசனைச் சபை முன்வர வேண்டும்.

இதை இப்போது செய்யத் தவறினால், பின்னாளில் கடுமையாக வருந்துவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவோரின் விபரங்கள் வெளிப்படுத்தப்படும்!

## யாழ்.அரச அதிபர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவோரின் விபரங்கள் எதிர்காலத்தில் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் எச்சரித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.குடாநாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும் என பொலிஸ் மற்றும் இராணுவத் தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு பெண்கள் மீது பாலியல் துன்புறத்தல்கள் மேற்கொள்வோர், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோர் எதிர்காலத்தில் அடையாளப்படுத்தப்படவுள்ளனர்.

அரச திணைக்களங்களிலும், தனியார் நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும், வீடுகளிலும் இவ்வாறான வன்முறைகளும் பாலியல் துன்புறுத்தல்களும் இடம்பெற்றுவருகிறது.

இந்த வருடத்தில் இதுவரை 176 முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

அத்தோடு இந்த முறைப்பாடுகளுடன் தொடர்புடையவர்களின் விபரங்களும் முழுமையாக கிடைக்கப் பெற்றுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான வன்முறைகளும் துன்புறுத்தல்களும் அதிகரித்தால் அவற்றுடன் தொடர்புடையவர்கள் ஊடகங்களின் மூலம் அடையாளப்படுத்தப்படுவார்கள்.

மேலும்போதைப்பொருள்பாவனை, திருட்டு கொள்ளைச் சம்பவங்களும் யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இதுதவிர இந்தியாவில் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளவர்களை மீள்குடியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

இந்தியாவின் நலன்புரி முகாம்களில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களில் பெரும்பான்மையானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற விரும்புவதாக அங்குள்ளவர்களில் பலர் கடிதம் மூலம் தெரிவித் துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## பொருட்காட்சி இன்றும் நடைபெறுகிறது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையும், கலைக்கேசரியும் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடத்திவரும் யாழ்ப்பாண வாழ்வியல் சார்ந்த பொருட்காட்சி இன்றும் நடைபெறுகின்றது.

இக்கண்காட்சி நேற்றுடன் நிறைவடைய இருந்த நிலையில் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க இன்றும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(எ-8)

## மனனப்போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான வாய்ப்பாட்டு மனனப்போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 10ஆம் திகதி திங்கிட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

அதேவேளை தரம் ஒன்று மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் தரம் 3,4 மாணவர்களுக்கான பண்ணிசைப் போட்டிகள் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 -ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(4-12-29)

* * * * * *

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 3,4,5 ஆகிய வகுப்புக்களில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான வாய்ப்பாட்டு மனனப்போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும். இதில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான மாகாண மட்ட போட்டிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறுமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (4-12-29)

## சனசமூக நிலைய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையமானது புகையிரத நிலையம் அருகாமை, கோண்டாவில் எனும் தற்காலிக முகவரியில் இன்று காலை 10 மணிக்கு புதிதாகத் திறந்து வைக்கப் படவுள்ளது.

எனவே உறுப்பினர்கள் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தலைவர் கேட்டுள்ளார்.(4-2-12)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய அதிபர்களுடனான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நாளை வியாழக்கிழமை இக்கலந்துரையாடல் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-12)

## நவராத்திரிப் பாமாலை



சிவனுக்கு ஒரு நாள் மாசி மாதத்தில்
வரும் சிவராத்திரி
அன்னை பரா சக்திக்கு புரட்டாதி மாதத்தில்
ஒன்பது இரவு
இது நவராத்திரி விரதமாகும்
வீரத்திற்கு துர்க்கையாம்
செல்வத்திற்கு இலக்குமியாம் கல்விக்கு சரஸ்வதியாம்
வணங்கிடுவோம்; முப்பேறும் பெற்றிடுவோம்.

எம். சானுகா
தரம் 9B
யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### நல்லன, மிக நல்லன, நனிசிறந்தன



என் அன்புக் குழந்தைகளே! இவர்களில் அன்பில்லாத எவனும் வாழ்ந்தவனில்லை. அன்புடையவனே வாழ்வாங்கு வாழ்பவன். என் செல்வங்களே! பிறர் துன்பத்தை உணர்வீர்களாக! ஏழைகளுக்கும் கல்வி அறிவற்ற பாமரமக்களும் தாழ்த்தப்பட்டவர்களும் படும் துன்பங்களுக்கு மனமிரங்குவீர்களாக! அவர்களுக்காக மனம் உருகி உருகி இதயமே வெடித்துப் போகும் வரை சித்தம் கலங்கி பைத்தியமே பிடித்துவிடும் என்ற நிலை வரும் வரை அவர்களுக்காக கசிந்துருகுங்கள். பின்னர் இறைவனின் பாதகமலங்களில் உள்ள உள்ளத்தை திறந்து கொட்டி முறையிடுங்கள். அதன் பிறகு ஆற்றல், உதவி, பொங்கித் ததும்பும் சக்தி உங்களைத் நாடி வருவதை உணர்வீர்களாக... எனவே என் அன்புச் செல்வங்களே! அஞ்ச வேண்டாம்.

அளவற்ற கருணை ஒளிசிந்தும் அந்த அருட் பெட்டகத்தை அது எங்கே நம்மை நசுக்கி விடுமோ என்றஞ்சிக் கொண்டு(அதை) நோக்க வேண்டாம். சற்றுப் பொறுங்கள்! சில மணி நேரங்களிலேயே அதன் அருளனைத்தும் உங்கள் காலடியில் வீழ்ந்து கிடக்கும். பொறுத்திருங்கள். செல்வம் பயன்தராது. பேரும் புகழும் பயனைத்தரா. கற்ற கல்வியும் காதவழிக்கும் வராது. அன்பு ஒன்றே பயன் தருவது. ஒருவனது உயர் பண்பு ஒன்றே துன்பங்கள் எனும் குறுக்கு சுவர்களைப் பிளந்து வீழ்த்தி வழியமைக்க வல்லது.

# 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் புதிய குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பு

## சி.பி.ஐ சட்டத்தரணி தெரிவிப்பு





(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் வழக்கில் முன்னாள் மத்திய மந்திரி ஆ.ராசா, கனிமொழி உள்ளிட்டோர் மீது புதிய குற்றச்சாட்டுக்களை பதிவு செய்யுமாறு சி.பி.ஐ நீதிமன்றில் சி.பி.ஐ மனுத்தாக்கல் செய்தது.

**குற்றப்பத்திரிகை**

ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணை டில்லி பாட்டியாலா ஹவுஸ் வளாகத்தில் உள்ள சி.பி.ஐ நீதிமன்றில் நீதிபதி ஓ.பி.சைனி முன்பு நடைபெற்று வருகிறது. முன்னாள் தொலைத் தொடர்புதுறைமந்திரி ஆ.ராசா, தி.மு.க. எம்.பி. கனிமொழி, கலைஞர் டி.வி நிர்வாக இயக்குநர் சரத்குமார் உட்பட 17 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவர்கள் மீது இ.பி.கோ 120 பி, 420, 468 மற்றும் 471 ஆகிய பிரிவுகளின் கீழும் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகளை பதிவு செய்வது குறித்து விரைவில் நீதிமன்றம் அறிவிக்க உள்ளது.

**புதிய வழக்கு**

இந்நிலையில் திடீர் திருப்பமாக ஆ.ராசா, கனிமொழி உள்ளிட்டோர் மீது புதிய குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய சி.பி.ஐ திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக சி.பி.ஐ நீதிமன்றில் சி.பி.ஐ சட்டத்த ரணி யு.யு.லலித் நேற்று முன்தினம் ஒருமனு தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டிருப்பதாவது.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் மத்தியமந்திரி ஆ.ராசா, அவருடைய முன்னாள் செயலாளர் ஆர்கே. சந்தோலியா, முன்னாள் தொலைத் தொடர்பு செயலாளர் சித்தார்த் பெகுரா ஆகியோர் அரசு ஊழியர்கள். அவர்கள் மதிப்பு வாய்ந்த 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசையை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் பெற்றிருந்தனர்.

அவர்கள் குற்றம் சாட்டப்பட்ட ஏனையவர்களுடன் குற்றச்சதியில் ஈடுபட்டு விதிமுறைகளை மீறியும் கொள்கைகளுக்கு முரணாகவும் தகுதி விதிமுறைகளை புறக்கணித்தும் மதிப்பு வாய்ந்த 2 ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசையை சட்டவிரோதமாக ஒதுக்கீடு செய்துள்ளனர்.

சுவான் டெலிகாம் நிறுவுநர் ஷாகித் உஷ்மான், பல்வா வினோத், கோயங்கா, சுவான் டெலிகாம் நிறுவனம், யுனிடெக் நிர்வாக இயக்குநர் சஞ்சய் சந்திரா, யுனிடெக் ஒயர்ஸ்லெஸ் நிறுவனம் ஆகியவை தவறாக பலன் அடைவதற்காக இந்த நம்பிக்கை மோசடியை செய்துள்ளனர்.

**கனிமொழி**

ஆகவே அரசு ஊழியர்களாக இருந்து கொண்டு நம்பிக்கை மோசடி செய்ததால் ஆ.ராசா, ஆர்.கே. சந்தோலியா, சித்தார்த் பெகுரா ஆகியோர் இ.பி.கோ 409 ஆவது பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை செய்துள்ளனர். ஆகவே அவர்கள் மீது அந்த பிரிவின் கீழ் குற்றம் சாட்ட வேண்டும்.

கனிமொழி உள்ளிட்ட மற்றவர்கள் இ.பி.கோ 120பி யுடன் (குற்றச்சதி) இணைந்து இ.பி.கோ 409 ஆவது பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை செய்துள்ளனர். ஆகவே அவர்கள் மீதும் அதன்படி குற்றம் சாட்ட வேண்டும்.

குற்றப்பத்திரிகையில் ஏற்கனவே கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுடன் இந்த புதிய குற்றச்சாட்டுக்களையும் சேர்க்க வேண்டும். அதன் அடிப்படையில் மேற்கண்ட குற்றச்சாட்டுக்களை பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

**எதிர்ப்பு**

ஆனால் சி.பி.ஐ.யின் மனுவுக்கு குற்றம் சாட்டப்பட்டவர்களின் சட்டத்தரணி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். குற்றச்சாட்டு பதிவு செய்யும் நடவடிக்கையை தாமதம் செய்வதற்காக இந்த மனுவை சி.பி.ஐ தாக்கல் செய்திருப்பதாக அவர் கூறினார். (4-2)

# பேருந்து ஆற்றில் வீழ்ந்தது; 3 குழந்தைகள் உயிரிழப்பு

(திருவனந்தபுரம்)

கேரளாவில் பாடசாலைக் குழந்தைகளுடன் சென்று கொண்டிருந்த பேருந்து ஆற்றில் விழுந்ததில் 3 குழந்தைகள் உயிரிழந்தனர்.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே 30 குழந்தைகளுடன் சென்ற பாடசாலைப் பேருந்து ஒன்று திடீரென குளத்தினுள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 குழந்தைகள் உயிரிழந்தனர்.

3 குழந்தைகளைக் காணவில்லை. அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. குளத்தில் மூழ்கி பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 20 குழந்தைகள் காப்பாற்றப்பட்டுவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குழக்குட்டம் செயின்ற் ஆன்ட்ரூஸ் ஜோதி நிலையம் இப்பாடசாலையைச் சேர்ந்த தரம் ஒன்று முதல் தரம் நான்கு வரை படிக்கும் குழந்தைகள் இந்தப் பாடசாலைப் பேருந்தில் பயணித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)




# திகார்சிறை கைதிகளுக்கான காப்புறுதித் திட்டம் அமுலில்

நாட்டிலேயே முதன்முதலாக திஹார் சிறை கைதிகளுக்கு காப்புறுதி வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது.

இந்த திட்டம் பற்றி திஹார் சிறை அதிகாரி ஒருவர் கூறியதாவது, நாட்டிலேயே மிகப் பெரிய சிறையான திஹார் சிறையில் மொத்தம் 12 ஆயிரத்து 500 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயிரம் பேரை தேர்வு செய்து அவர்களுக்கு விபத்து காப்பீட்டு திட்டம் கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்து காப்பீட்டு திட்டத்தை அமெரிக்காவின் மாக்ஸ் நியூயோர்க் காப்புறுதி நிறுவனம் மூலம் அமுல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறைக் கைதிகளுக்கு காப்புறுதித் திட்டம் கொண்டு வரப்படுவது நாட்டிலேயே இதுதான் முதன்முறையாகும்.

விபத்து காப்பீட்டு திட்டத்தில் சேரும் கைதிகள் அதற்காக மாதம் ரூ400 செலுத்த வேண்டும். இந்த தொகையை 3 மாதத்துக்கு ஒரு முறையோ அல்லது 6 மாதத்துக்கு ஒரு முறையோ செலுத்தலாம்.

கைதிகள் திறமைக்கேற்ப சிறைச்சாலையில் வேலை கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கைதிகள் சுமார் 40 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கின்றனர். எனவே மாதம் ரூ400 தவணை தொகை செலுத்துவதில் அவர்களுக்கு எந்த பிரச்சினையும் ஏற்படாது.

ஒருவேளை அவர்களால் அந்த தவணை தொகையை கட்ட முடியாவிட்டால் சிறைக்கைதிகளுக்கான நல நிதியில் இருந்து கடனாக பெற்று தவணை தொகையை கட்டவும் ஏற்பாடு செய்யப்படும். பின்னர் அந்த கடன் தொகையை வேலை செய்து மாதாமாதம் கழிக்கலாம்.

கைதிகளிடம் இந்த காப்புறுதி திட்டம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. எதிர்கால வாழ்க்கைக்கு சேமிக்க முடிவதுடன் சிறையில் இருந்தபடியே வேலை செய்து குடும்பத்தை காப்பாற்றவும் முடிகிறது. அத்துடன் எங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்க முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளதாக கைதிகள் கருதுகின்றனர்.

சிறையில் இருக்கும் போதே அவர்கள் திருந்தி மனதுக்கு பிடித்த வேலை செய்து பழகி விடுவதால் விடுதலையாகி சென்றதும் வெளி உலகில் எளிதில் வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. (4-2)

# வாக்குறுதிகளை நிறைவேற்றாது தி.மு.க.வை அழிக்க நினைக்கிறார்கள்

## மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு



(திருச்சி)

முதல்வர் ஜெயலலிதா திமு.க.வை அழிக்க நினைக்கிறார் என்று அக்கட்சியின் பொருளாளர் மு.க்.ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.

திருச்சியில் தி.மு.க செயல் வீரர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஸ்டாலின் பேசியதாவது,

முதல்வர் ஜெயலலிதா தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தி.மு.கவை அழிக்க நினைக்கிறார். தி.மு.க.வை அழிக்க நினைத்தவர்கள்தான் இதுவரை அழிந்துபோயுள்ளனர். தி.மு.க.வினருக்கு திருச்சி மாவட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏற்கனவே கருணாநிதி முதல்முறையாக திருச்சி மாவட்டத்தில் உள்ள குளித்தலையில் போட்டியிட்டார்.

இங்கு என்னுடைய நெருங்கிய நண்பர் பொய்யாமொழி போட்டியிட்டு வெற்றி பெற்று இளம் வயதிலேயே உயிரிழந்தார். அப்போது இடைத்தேர்தல் வந்தது .அவருடைய குடும்பத்திலே அவருடைய தம்பி அன்பில் பெரியசாமி போட்டியிட்டார். அந்த இடைத்தேர்தலில் 10 நாட்கள் தங்கியிருந்து தேர்தல் பணியை செய்தேன். அந்த வகையில் திருச்சிக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

முதலில் திருச்சி மேற்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று கருணாநிதி யோசித்தார். அந்த இடத்திற்கு அவரது குடும்பத்தைச் சேர்ந்த யாரையாவது வேட்பாளராக நிறுத்தியிருந்தால் தி.மு.க கட்டாயம் வேட்பாளரை நிறுத்தியிருக்காது. ஆனால் வேறொருவரை அ.தி.மு.க தேர்தலில் நிறுத்தியிருக்கிறது.

தி.மு.கவை ஒழிக்க வேண்டும் என்றும் தி.மு.க.வினரை கொடுமைப்படுத்த வேண்டும் என்றும் முக்கிய தலைவர்களை எல்லாம் சிறை வைக்க வேண்டும் என்றும் கங்கணம் கட்டிக் கொண்டு பொலிஸாரை ஏவிவிடும் அராஜக ஆட்சிக்கு ஒரு சவுக்கடி கொடுப்பதற்காகவும் இந்த தேர்தலில் நம்முடைய வெற்றி அமைய வேண்டுமென ஸ்டாலின் கூறினார். (4-2)



பாட்னாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பீகார் முதல்வர் நிதீஸ்குமாருக்கு லோக் சபா நாயகர் மீராகுமார் பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்

# இலங்கை அணியை சரிவிலிருந்து மீட்டெடுப்பதே பிரதான இலக்கு

## புதிய பயிற்றுவிப்பாளர் மார்ஷ் சபதம்


கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை கிரிக்கெட் அணி எதிர்நோக்கிய சரிவுகளிலிருந்து அணியை மீளக் கட்டியெழுப்பி முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதே தனது பிரதான இலக்கு என இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுவிப்பாளராகப் பொறுப்பேற்றிருக்கும் ஜெப் மார்ஷ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இளம் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டமையைக் காணக்கூடியதாகவிருந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தத் தொடரில் 24 வயதுடைய இள வயது துணைத் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அதேநேரம் வேகப் பந்துவீச்சாளர் சமிந்த எரங்க இறுதி டெஸ்ட் போட்டியில் சிறப்பாக பந்து வீசியிருந்தார்.இந்தத் தொடரில் இலங்கை அணி 0:1 என்ற கணக்கில் தோல்வியடைந்தாலும் ஐ.சி.சி தரவரிசையில் 5-வது இடத்தில் உள்ளது.

அவுஸ்திரேலியா இருக்கும் தரத்திலேயே இலங்கை அணியும் உள்ளது.கடந்த வருடங்களில் இலங்கை அணி சனத் ஜெயசூரிய, சமிந்தவாஸ், முத்தையா முரளிதரன் போன்ற அனுபவம் மிக்க வீரர்களை இழந்துள்ளது. இலங்கை போன்ற நாட்டுக்கு இது பாரியதொரு இழப்பு.



இருந்தாலும் மத்யூஸ் போன்ற இளம் வீரர்கள் உள்ளனர்.இரண்டு சிறப்பான சுழற்பந்துவீச்சாளர்கள் உள்ளனர். அனுபவம் மிக்க வீரர்களை இழந்திருக்கும் நிலையிலிருந்து அணியை மீளக்கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

எதிர்வரும் 12 மாதங்களுக்குள் இலங்கை அணி வீரர்கள் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக சிறப்பாக செயற்படச் செய்வதே தனது இலக்கு என்று குறிப்பிட்டிருக்கும் மார்ஷ், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி கடுமையாகப் போராடியிருந்தது. அவர்களுக்குள் இருக்கும் இந்தப் போராடும் திறனை மேலும் வளர்த்துவிட்டால் இலங்கை அணியை சிறந்த நிலைக்கு மீளக்கொண்டு வர முடியும் என்றார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் மார்ஷ் நேற்று இலங்கை வந்து தனது பதவியை பொறுப்பேற்றார்.

## இலங்கை...

வதற்கு சட்டமா அதிபரின் அனுமதியை பெற வேண்டியிருக்கும் என அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை சிறைக் கைதிகளுக்கு விசா வழங்க இந்தியாவை சம்மதிக்கச் செய்வதும் மற்றுமொரு கடினமான காரியமாக இருக்கும் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)


### திசைகாட்டி

(முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்)

* குறைந்த கட்டணத்தில் UK, Australia விசா ஆலோசனை
* சட்டத்தரணிகளால் இலவச சட்ட ஆலோசனை

இலங்கையிலேயே மிகக் குறைந்த கட்டணத்தில்

| | |
|---|---|
| IELTS | - 10,000/= மட்டும் |
| A1 | - 10,000/= மட்டும் |
| B1 | - 10,000/= மட்டும் |
| B2 | - 10,000/= மட்டும் |
| Spoken English | - 2000/= மட்டும் |

வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு இலவசம்

தினமும் காலை 10 - பி.ப. 5மணி வரை

தேவை: Clerk (பெண்) தேவை

நேரில் வரவும்.

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, (EXPO முன்பாக) யாழ்ப்பாணம்.


# கொல்கத்தாவுக்கு அடுத்த அடி

## தெற்கு அவுஸ்திரேலியா வெற்றி

(ஹைதராபாத்)

சம்பியன்ஸ் லீக் இருபது-20 போட்டியில் கொல்கத்தா அணி இரண்டாவது தோல்வியை சந்தித்தது. துடுப்பாட்டத்தில் அசத்திய தெற்கு அவுஸ்திரேலிய அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவில் மூன்றாவது சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் நடக்கிறது. இதில் பி பிரிவில் நேற்று நடந்த லீக் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ்,தெற்கு அவுஸ்திரேலியா அணிகள் மோதின

நாணயச் சுழற்சியில் வென்ற தெற்கு அவுஸ்திரேலியா அணித் தலைவர் கிளிங்கர் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

### அதிரடி ஆரம்பம்

தெற்கு அவுஸ்திரேலிய அணிக்கு ஹரிஸ், கிளிங்கர் இணைந்து ஆரம்பம் கொடுத்தனர். இக்பால் அப்துல்லா, யூசுப் பதான் பந்துகளில் சிக்சர்கள் விளாசிய ஹரிஸ் (25) சற்று தாக்குப் பிடித்தார். மறுபுறம் கிளிங்கர் (20) ரன் அவுட்டானார். போர்க்ஸ் (14) நிலைக்கவில்லை.

### சுப்பர் ஜோடி

இதன்பின் பெர்குசன், கிறிஸ்டியன் இணைந்தனர் . இந்த ஜோடி கொல்கத்தா அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர். அதிரடியில் அசத்திய கிறிஸ்டியன் (42) அரைச் சத வாய்ப்பை இழந்தார். கூப்பர் (1) ஏமாற்றினார். 18 ஓட்டங்களில் அவுட்டாகும் வாய்ப்பில் இருந்து தப்பிய பெர்குசன் சிக்சர், பவுண்டரி மழை பொழிந்தார்.

தெற்கு அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களை எடுத்தது.

பெர்குசன் (40) பந்துகளில் 70 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார். கொல்கத்தா அணி சார்பில் பாலாஜி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.


### மீண்டும் ஏமாற்றம்

கடின இலக்கை துரத்திய கொல்கத்தா அணிக்கு முதல் ஓவரில் மூன்று பவுண்டரி அடித்த பிஸ்லா (13) ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார். சகிப் அல் ஹசன் (13) நீடிக்கவில்லை ஐ.பி.எல் ஏலத்தில் ரூபா 11.7 கோடிக்கு வாங்கப்பட்ட அணித்தலைவர் காம்பீர் (9) மீண்டும் ஏமாற்றினார்.அனுபவ வீரர் கலீசும் (20) அணியை கைவிட்டார்.

### யூசுப் சொதப்பல்

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட யூசுப் பதான் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து மற்றொரு அதிர்ச்சி தந்தார். சற்றுத் தாக்குப் பிடித்த மனோஜ் திவாரி அதிக பட்சமாக (40) ஓட்டங்களை எடுத்தார். பின் வந்த டோசட் (32) பாத்தியா (21) கடைசி நேரத்தில் போராடிய போதும் அது வெற்றிக்கு போதவில்லை. பிரட் லீ டக் அவுட்டானார்.

கொல்கத்தா அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இத் தொடரில் இரண்டாவது தோல்வியை பதிவு செய்தது. இக்பால் அப்துல்லா (10) ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆட்டநாயகனாகபெர்குசன்தேர்வுசெய்யப்பட்டார்.




ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், பான் பசுபிக் ஓபன் டெனிஸ் தொடர் நடக்கிறது. இதன் முதல் சுற்றில் அவுஸ்திரேலியாவின் அனஸ்டாசியா ரோடியோனாவை வீழ்த்திய செர்பிய வீராங்கனை அனா இவானோவிச்.

## வடக்கில் பாராமுக...

சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வேட்பாளர் எம்.ஐ.அப்துல் மஜிட் தலைமையில் நடைபெற் றது.

இக்கூட்டத்தில் வீடமைப்பு, நிர்மாணத் துறை, பொறியியல் சேவைகள் மற்றும் பொது வசதிகள் அமைச்சின் அதிகாரிகள், பிராந்திய முகாமையாளர்கள்,சாய்ந்தமருது பிரதேச செயலாளர், வீடமைப்பு உத்தியோகத்தர்கள், மதத் தலைவர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் எதிர்க் கட்சிகள் அனைத்தும் சிதறி சின்னாபின்னம் ஆக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள கட்சிகளின் தலைவர்கள் சரியில்லை. இதன் காரணமாக கட்சிகளுக்குள்ளேயே பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இதனை உணர்ந்த மக்கள் அக் கட்சிகளின் பின்னால் நிற்பதற்கும் தயக்கம் காட்டி வருகின்றனர். ஆகையால் தமிழ்,முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் ஒருமித்து கைகோர்த்து அபிவிருத்தியின்பால் செல்லக் கூடிய நிலை தற்போது காணப்படுகின்றது எனவும் தெரிவித்தார். (ச-5)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி குமாரவேலு சறோஜினி



எமது பாடசாலை ஆசிரியர் யசோதரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி குமாரவேலு சறோஜினி அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

(சி-4576)





யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினால் நேற்று நெடுந்தீவிலுள்ள மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. வாழ்வாதார உதவிகளை வழங்கியவருடன் வணிகர் கழக உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
aramex
யாழ்ப்பாணம்
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

சண் சலூன்
பாடசாலை அருகாமை
கைவேலி, புதுக்குடியிருப்பு
[மீண்டும் புதுப்பொலிவுடன் உதயமாகியுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்] (சி-4514)

புதியதோர் உலகம் செய்வோம்
DCM 1ம் குறுக்குத் தெரு, யாழ்நகர் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
A/L DAY CLASS
திங்கள் முதல் வெள்ளி வரை 7.30 - 12.00
ஆரம்பம் : 3 - 10 - 11 திங்கள் 7.30
சிறந்த முடிவு அனுபவத்திலிருந்து வருகின்றது ஆனால் அனுபவமோ தவறான முடிவிற்குப் பின்னரே வருகின்றது.
நிர்வாக இயக்குநர் S. வரதராஜன்

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம் 10.09.2011
தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134 (சி-4418)

## சனல் 4 வீடியோ...

ஒட்டாவா நகரில் லாப்பியன் நாடே கட்டிடத்தில் இந்தக் வீடியோ காண்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் கருத்து வெளியிடுகையில், கனேடியத் தூதுவர் ஊடாக இந்த வீடியோக் காட்சிப்படுத்துவதை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வெளியுறவுத் துறை அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-9)

## வன்னியில் மக்கள்...

அரசாங்கத்தால் பாதுகாப்பு வலயங்கள் என பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் மீது படைத்தரப்பினர் ஆட்டிலறி, மோட்டார், பல்குழல் எறிகணைத் தாக்குதல்களையும், கொத்துக் குண்டுகள் மற்றும் கனரக ஆயுதங்களைக் கொண்டு கடுமையான தாக்குதல்களை நடத்திவருகிறது.

அத்துடன் 3 இலட்சத்து 65 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு மத்தியில் நான் வாழ்ந்து வருகிறேன். இப் போர் தொடர்பில் இலங்கைத் திருச்சபை தனது எதிர்ப்பை தெரிவிக்கும் துணிச்சல் அற்றிருப்பது கவலை ஏற்படுத்துவதாக உள்ளது.

தமது சுதந்திரத்திற்காக போராடுகின்ற தமிழ் மக்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உங்களின் புனிதமான சேவையை எதிர் பார்த்துள்ளனர்.

இக் கடிதத்தை தான் அனுப்புவதன் ஊடாக அரசாங்கம் என்னை கொல்லலாம் அல்லது இலங்கைதிருச்சபைஎனக்குத்தண்டனைவழங்கலாம் எனவும் பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் இக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் படைத்தரப்பினரால் பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டிருந்த நிலையில் அவர் காணாமல் போயுள்ளதாக திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஆயரான கிங்சிலி சுவாம்பிள்ளை இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவிடம் பின்னர் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஏளனமாக பதிலளித்...

செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களை இலக்கு வைத்து தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம் என வலியுறுத்தியதாக றொபேர்ட் ஓ பிளேக் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த தகவல் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் விடுதலைப்புலிகளின் பீரங்கி நிலைகள் இருந்தாலும் கூட அப் பிரதேசங்களை இலக்கு வைத்து பீரங்கித் தாக்குதலை மேற்கொள்ள வேண்டாம் என கோத்தபாய ராஜபக்ஷ விடம் தான் வலியுறுத்தியதாகவும் றொபேர்ட் ஓ பிளேக் கூறியுள்ளார்.

இந் நிலையில் மோசமான காலநிலை காரணமாக இரு நாட்களாக ஜெட்போர் விமானங்கள் பறக்க வில்லை என ஏளனமாக பதில் அளித்த கோத்தபாய ராஜபக்ஷ இதன்போது பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்து வியப்புடன் கேள்வி எழுப்பியதாகவும் விக்கி லீக்ஸ் தெரிவித்துள்ளது.

இதையடுத்து பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் பொதுமக்களுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இப்பாதுகாப்பு வலயங் களை இலக்கு வைத்து தாக்கு தல்களை மேற்கொள்ள வேண்டாம் என களத்தில் இருக்கின்ற படை தளபதிகளுக்கு பணிக்கு மாறு படைத் துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விடம் றொபேர்ட் ஓ பிளேக் வலியுறுத்தியதாக விக்கி லீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (எ-5)

## சர்வதேச ஒப்பந்தங்களால் தப்...

தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதிவதிவிட பிரதிநிதியாக பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிடம் நியூயோர்க் நீதிமன்றம் ஒன்றின் அழைப்பாணையை வழங்க சேவகர் ஒருவர் முயன்றதாக வெளிவிவகார அமைச்சின் கவனத் திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர பிரதிநிதி என்ற வகையில் சவேந்திர சில்வாவுக்கு சர்வதேச ஒப்பந்தங்களுக்கு அமைய இராஜ தந்திர பாதுகாப்பும் உரிமைகளும் உண்டு என வெளிவிவகார அமைச்சு கருதுகிறது.

இலங்கையின் பிரதிநிதியாக சவேந்திர சில்வா தனது கடமையைச் செய்வதற்கு இடையூறு ஏதும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது ஐ.நாவினதும் ஐ.நா. நிகழ்வுகளை நடத்தும் நாட்டினதும் கடமையாகும்.

இலங்கை அரசாங்கத்தின் ராஜதந்திரி என்ற வகையில் சவேந்திர சில்வா தன் கடமையை சுதந்திரமாக செய்வதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையை வெளிவிவகார அமைச்சு மேற்கொள்ளும்.

ஐ.நாவின் 66ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தவிடயத்தை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

சவேந்திர சில்வாவுக்கு ராஜதந்திர ரீதியான சகல பாதுகாப்புக்களையும் வழங்கி அவர் இடையூறு ஏதும் இன்றி தனது ராஜதந்திர கடமையை செய்ய அனுமதிக்கும்படி ஜனாதிபதி வலியுறுத்திச் சென்றார் என தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-5)

## நவராத்திரிப் பாமாலை

உங்கள் வலம்புரியில் வெளிவரும் நவராத்திரிப் பாமாலைக்கு மாணவர்களிடமிருந்து பாமாலைகள் வரவேற்கப்படுகின்றன. மாணவர்களால் எழுதப்பட்ட பாமாலைகள் மட்டுமே இதில் சேர்த்துக் கொள்ளப்படும். (ஆ-ர்)

## ஐ.நா.தய...

தற்போது நியூயோர்க்கில் நடை பெற்று வரும் 66ஆவது ஐ.நா கூட்டத்தொடரில் கனேடிய அரசின் சார்பில் செப்ரம்பர் 26ஆம் திகதி திங்கட்கிழமை மாலை பொதுச் சபையில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் ஐ.நா. கூட்டத்தொடரில் இலங்கை குறித்து பொதுச்சபை யில் கருத்து தெரிவித்த ஒரே நாடு கனடா என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பன்நாட்டு நிறுவனங்கள் தங்கள் கொள்கைகளை செயற்படுத்து வதில் காட்டி வரும் முன்னுக்குப்பின் முரணான செயற்பாடுகளால் தாழ்வு நிலைக்குச் செல்வதை கனடா தொடர்ந்தும் எதிர்த்துவந்துள்ளது.

அதற்கு உதாரணமாக 50 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னாபிரிக்க இனவெறி அரசை கெமன் வெல்த் நாடுகளின் கூட்ட மைப்பில் சேர்த்துக்கொள்வதில் கனடா தெரிவித்த எதிர்ப்பை கனேடிய வெளிவிவகார அமைச்சர் சுட் டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. சபையின் பெரிய எதிரி கள் அதன் செயற்பாடுகளை வெளிப் படையாக குறை கூறுபவர்கள் அல்ல. மாறாக அமைதியாக அதன் கொள்கைகளை உதாசீனம் செய்பவர்கள் இன்னும் மோசமானவர் கள் ஒன்றுமே செய்யாமல் ஐ.நா. கீழ்நிலைக்குசெல்வதைப்பார்த்துக்கொண்டிருப்பவர்கள். நாங்கள் அவ்வாறு அமைதியாக இருக்க முடியாது என கனேடிய வெளிவிவ கார அமைச்சர் ஜோன் பெயர்ட் மேலும் தெரிவித்தார்.

நாடுகளின் தனித்துவத்தை கனடா மதித்தாலும் சிறுபான்மையினருக்கான மனித உரிமைகள் அடிப்படை சுதந்திரங்கள் மறுக்கப் படுகின்றபோது முகத்தைத் திருப்பிக்கொண்டுமறுபக்கம் பார்க்கமாட் டோம். பாதிக்கப்பட்டவர்களின் உரிமைக்காக குரல் அடக்கப்பட்டவர்களின் குரலாக ஒலிப்பது எம் அனை வரின் பொதுக் கடமை எனவும் அவர் தனது உரையில் மேலும் தெரிவித் துள்ளார். (எ-5)

Student Visa
Visit Visa & Migration
Student / Visit & Migration
UK/Canada/Australia/New Zealand/Malaysia/Poland/Spain
Reject / Refusal visa க்கள் பரிசீலனை செய்து தரப்படும்
◆ புதிய வீசா விதிகளுக்கமைய Visa Process மிக திறமையாக செய்து தரப்படும்.
◆ 15 வருட அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் ஆவணங்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
◆ அங்கீகாரம் பெற்ற College/University அனுமதி.
Business & Skill, Engineers, Accountants, Doctor, IT Degree holders க்கான Australia நிரந்தர வதிவுரிமை பெறுவதற்கும்... ஏனைய நாடுகளுக்கான Student Visa வுக்கான இலவச கருத்தரங்கு Jaffna Branch இல் 30-09-2011 பி.ப 3.00 - 6.00 வரை நடைபெறும்.
முற்பதிவு மேற்கொண்டவர்களுக்கு மட்டும்
முன் பதிவுகளுக்கு : 0777849853 / 0774454646
ADMISSION INTAKE 2011- OCT/NOV 2012 - JAN
O/L, A/L OFFER Letter 3 within days
Min Qualification O/L
EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
Jaffna Branch:-
82/12A, Chetty Street, Nallur.
Tel.:- 0777849853, 0774454646 (6436)

புலமைப் பரிசில் வகுப்பு
யாழில் சாதனை நிலைநாட்டிய பாடசாலையின் விசேட ஆசிரியர்
திரு.சி.ஞானகுமாரன்
அவர்களின் விசேட புலமைப் பரிசில் வழிகாட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் : 01-10-2011 சனி மாலை 3.00மணி
தரம் 5 புலமைப்பரிசில் 2012 (தற்போது தரம் 4)
புதிய அனுமதிகள் இன்று முதல்
தரம் 4 புலமைப்பரிசில் 2013 (தற்போது தரம் 3)
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Upto 90% Discount + Free5 Diploma Course fee
Ms Office, DTP, Hardware & Networking
Accounting, Web Design, Business English
6 கற்கைநெறிகளில் ஏதாவது ஒரு கற்கைநெறியை தேர்வு செய்து ஏனைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிகட்டணமின்றி பயிலும் வாய்ப்பு
இன்றே உங்கள் <Name>,<Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
MCS Supported By UNDP/JRRP
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
324, Palaly Road, Parameswara Junction
facebook - mcsitcampus
www.mcsitcampus.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.